

# முருகன் அந்தாதி

பொதுப்பதிப்பாசிரியர்

திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,

# முருகன் அந்தாதி

பொதுப்பதிப்பாசிரியர்
திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்
தொல்லியல் துறை
எழும்பூர்
சென்னை - 8

பதிப்பாசிரியர்
வ. நாகராசன், எம்.ஏ.,பி.எட்.,
தமிழ்ப் புலவர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
(மற்றும்)
ஆய்வு மையம்.
சென்னை - 5.

விலை ரூ.42

## பொதுப்பதிப்பாசிரியர் உரை

அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், தமிழ்நாடு தொல்லியல் துறையைச் சேர்ந்ததாகும்.

கர்னல் காலின் மெக்கன்சி (1754-1821) என்ற ஸ்காட்லாந்து நாட்டவர் தொகுத்த ஓலை மற்றும் தாட் சுவடிகளை மையமாகக் கொண்டு, 1869இல் இம் மையம் நிறுவப்பட்டது.

தற்போது, 4000 சதுர அடி பரப்பளவுள்ள குளிர்சாதனம் செய்யப்பட்ட ஓர் இருப்பறையில் தகுந்த முறையில் இம் மையத்தில் மொத்தம் 72,314 சுவடிகளும், 26,788 அரிய அச்சு நூற்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 458 வெளியீடுகளை இம்மையம் வெளியிட்டுள்ளது! ஒரு பல்கலைக்கழகத்தின் சாதனை இது! 2005-ஆம் ஆண்டு, முதன் முறையாக, மையச் சுவடிகளை நுண்படமாக்கும் பணி தொடங்கப்பட்டு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. இம் மையத்தில், வேதம், இலக்கியம், புராணம், சிற்பம், மருத்துவம், அகராதி, இலக்கணம், வானவியல் முதலிய பொருட்களில் சுவடிகள் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி எண்ணற்றவர்கள் முனைவர் பட்டங்கள் பெற்று வருகின்றனர். சென்னையில் நடத்தப்படும் சுவடியியல் பயிற்சி வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் இம் மையமே படிப்புக்களமாகத் திகழ்ந்து வருகிறது.

இம் மையக் கருவூலத்தைப் பயன்படுத்திப் பட்டங்கள் பெறுவோர் பெறலாம்! தொழில் தொடங்குவோர் தொடங்கலாம்! நூல் எழுதுவோர் எழுதலாம்! மொத்தத்தில் மக்கள் வாழ்வுக்கு ஆதாரமான மையம் இது!

2005-06ஆம் நிதியாண்டில் தமிழ் கற்கும் முறை, முருகன் அந்தாதி, பன்மொழிப் பருவ இதழ் தொகுதி 32 ஆகியன வெளிவருகின்றன. இந்தியக் கல்வியாளர்களுக்குத் தமிழகத்தின் ஒரு நன்கொடை இவை!

சிறப்பு ஆணையர்
தொல்லியல் துறை, சென்னை-8.

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முருகன் அந்தாதி |
| பொருள் | : | சிற்றிலக்கியம் |
| பொதுப்பதிப்பாசிரியர் | : | **திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.**<br>சிறப்பு ஆணையர்,<br>தொல்லியல் துறை,<br>சென்னை - 8. |
| பதிப்பாசிரியர் | : | வ. நாகராசன் |
| வெளியீட்டாளர் | : | அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள்<br>நூலகம் மற்றும் ஆய்வு மையம்,<br>சென்னை - 5. |
| வெளியீட்டெண் | : | அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள்<br>நூலகம் மற்றும் ஆய்வு மைய<br>வெளியீடு - 457.<br><br>தமிழ் நூல் வெளியீடு : 129 |
| உரிமை | : | அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள்<br>நூலகம் மற்றும் ஆய்வு மையம்,<br>சென்னை - 5. |
| நூல் அளவு | : | 20.5 X 13 செ.மீ. |
| அச்செழுத்து | : | 12 பாயிண்ட் |
| விலை | : | ரூ. 42/- |
| தாள் | : | 70 GSM Maplitho |
| பக்கங்கள் | : | 14 + 140 |
| கட்டமைப்பு | : | சாதாரணம் |
| கணிப்பொறி அச்சு<br>அச்சிட்டோர் | :<br>: | **இராயப்பேட்டை சொசைட்டி**<br>26, கோயா அருணகிரி முதல் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>☎ : 2848 5670, 2848 1803 |

# காப்பாட்சியர் முன்னுரை

**முருகன்** எ. தமிழ்ச் சொல் தமிழில் இதுவரை சரிவர ஆயப்படவில்லை.

முருகன் - என்றால் அழகு, இளமை என்றெல்லாம் உள்ள பொருட்களைக் கொண்டு 'கடவுள்' முருகனை ஆய்ந்தார்கள், துதித்தார்கள் என்றே காண்கிறோம்.

**முருகன்** - என்ற சொல்லுக்கு, **உயர்வு** என்றொரு பொருளும் உண்டு; தமிழ் அகராதிகளில் இதனைக் காணலாம்.

உயர்வான குன்று தான் மிகப் பழந்தமிழில் 'முருகன்' எனச் சுட்டப்பட்டது.

அதற்கு அடுத்த காலகட்டத்தில், குன்றில் அரசாளும் அரசன், 'முருகன்' எனப்பட்டான்!

வணங்குகிறோமே, முருகன், அவன்? அவனும் ஓர் அரசனே!

பழனி முருகன் என்றால், பழனி மலையை ஆண்ட ஒரு சிற்றரசன் என்பது பொருள்; அவனையே நாம் வணங்குகிறோம்!

இந்தப் பின்புலத்தில்தான் இங்கே பதிப்புப் பெறும் **முருகன் அந்தாதி**யையும் ஆய வேண்டும்.

தமிழில் 'முருகா' என்ற சொல்லுக்கு 'உயர்வான' என்றொரு பொருள் இருப்பதில் உங்களுக்கு ஐயம் உள்ளதா?

முருங்கைக் காயைப் பாருங்கள்!

நீளமாக இருப்பதால், அது முருங்கைக் காய்!

முரு - என்ற பகுதிக்கு உயர்வு உயர்வு, நீட்சி என்ற பொருண்மைகள் இருப்பது விளங்குகிறதல்லவா?

இது போன்ற ஆய்வுகளுக்கு உறுதுணையாக இருக்கும் எங்கள் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீதர் இ. ஆ. ப. அவர்களுக்கு என் நன்றி உரித்தாகும்.

அன்புடன்


- **முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்கிலம்), பி.எட்.,டிப். வ. மொ
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள்நூலகம்
(மற்றும்) ஆய்வு மையம்.
சென்னை - 5.

# பதிப்புரை

பழந்தமிழர் வாழ்வில் அகம், புறம் இரண்டையும் தம் இரு கண்களாகக் கொண்டொழுகினர். இதனை நாம் சங்க இலக்கிய வழிக் காணலாம். அச்சங்க இலக்கியங்களுக்கெல்லாம் முன்தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியரின் தொல்காப்பியம். குன்றில் விளையாடும் குமரனைச் "சேயோன் மேய மைவரை உலகமும்" எனக் குறிப்பிடுதலை அறியலாம். முடியுடை மூவேந்தர் ஆண்ட நம் தமிழகம் கால நிலை மாற்றத்திற்கேற்ப பலரின் ஆளுமைக்குட்பட வேண்டியமையை இலக்கிய, வரலாற்று வழி நாம் காண்கிறோம்.

மனிதன் தனக்கு மீறிய ஆற்றல் என்று ஒன்று உண்டு என எண்ணியிருக்கக் கூடும். நாளடைவில் தனக்கு விளங்காத அவ்வாற்றலைத் தன் கண்களுக்குப் புலனாகும் பொருள்வழி நின்று வணங்க முற்பட்டான். அதுவே பிற்காலத்தில் இறைவழிபாடாக மலர்ந்தது. கற்காலம் தொடங்கி இன்றைய நாள் வரை இவ்வழிபாடு தமிழகத்தில் நிலை பெற்றிருப்பதை நாம் அறியலாம்.

பண்டைத் தமிழர் உயரிய குறிக்கோள் கொண்டு வாழ்ந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் "உண்டாலம்ம இவ்வுலகம்" எனும் அடிகள் வழி அறியலாம். பண்பாட்டில் உயர்ந்த அவர்கள் தம் வாழ்வு வளமுடன் சிறக்க இயற்கையை வழிபட்டனர். மனிதன் பொருள்களையெல்லாம் வழிப்பட்டான்.

அங்ஙனமே மலை, குன்று, மரம் போன்றவற்றை வழிபாடு செய்தல் பழக்கமாயிற்று. அளவால் உயர்ந்து அடி, முடி காணா நிலையிலுள்ள அவை அச்சமும், வியப்பும் கலந்த ஒரு பொருளாக அவன் கண்களுக்குப் பட்டிருக்கக் கூடும். எனவே அவற்றை வழிபாடு செய்தான்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் முனைவர் திரு. சு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தம் “தமிழர் சிந்தனை - சமயக் கோட்பாடுகள்” எனும் நூலில் மலையைச் சிவன் என்றும், குன்றை முருகன் என்றும் மிகப் பழங்காலத்தில் தமிழர்கள் குறிப்பிட்டனர்” எனக் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

இதனை நோக்குங்கால் இயற்கை வழிபாடு மனிதன் வாழ்வில் இரண்டறக் கலந்த ஒன்று என்பது வெள்ளிடை மலையாம்.

ஆசையில் திளைக்கும் மனிதன் தான் பெற வேண்டியவற்றிற்காக மற்றவர்களுக்குத் துன்பமும், தொல்லையும் தருகிறான். பண்டுதொட்டு இன்றுவரை இப்பழக்கம் வேரூன்றிக் கிடக்கிறது. அறிவுசான்ற மக்கள் இறைவழிபாடு என்கிற நோக்கிலாவது நம் அகமனத்திலுள்ள வஞ்சம், பொறாமை, கள்ளம், பொய் போன்ற தீக்குணங்கள் நீங்காதா என்ற உயரிய நோக்கில் உருவானதே இறைவழிபாடு. அவ்வழிபாட்டிலும் பல்வேறு வேறுபாடுகள் வேர் விட்டிருந்தன. அரசு அனைத்திற்கும் அடிப்படை என்பது போல் ஆண்ட அரசர்களின்

வழியே குடிகளும் சமய நெறி மேற்கொண்டதை நாம் காணலாம். சிவனியம், மாலியம், சமணம், புத்தம் போன்ற அனைத்து மதங்களுக்கும் தமிழகம் காலந்தோறும் இடம் தந்தமையை நாம் வரலாற்றுவழி அறிகிறோம்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் எங்ஙனம் தன் சீரிளமை குன்றாது அன்றுபோல் இன்றும், என்றும் நிலைத்து, தழைத்து இருக்கின்றதோ அது போல் தமிழ் மக்களிடம் சிவனியம் (சைவம்) அன்று தொட்டு இன்றும் நிலை பெற்றுள்ளது. நாயன்மார்கள் தங்களின் பக்தியின் பெருக்கால் பல்வேறு பாசுரங்கள் பாடித் "தென்னாட்டுடைய சிவனை" எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆக்கினர். அவ்விறைவன், சிவனின் இளைய குமரனே முருகன் என்ற அழகன்.

முருகு என்றாலே அழகு எனப்படும். இயற்கையெழில் மிக்க மலைகளையும், குன்றுகளையும் நாம் நோக்குங்கால் அவற்றின் எழில்மிகு தோற்றம் நம் நெஞ்சைத் தொடுவதை அறியலாம். பிறவாயாக்கைப் பெறியோனுக்கும் உலகிற்கு அருள்பாலிக்கும் அன்னை பராசக்திக்கும் இளையவனாக வந்துதித்தவனே வேலன்.

அவனின் செயல்பாடுகள் பற்றி பல நூல்கள் பேசுகின்றன. அவனுக்கு அறுபடை வீடுகள் இருந்தமையும், அதுமட்டுமன்று வேறுபல வீடுகள் இருந்தமையும் நாம் நூட்கள் வழி காணலாம்.

இங்கு சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள ஓலைச் சுவடி எண்.R. 4972 எண்ணுள்ள

சுவடியில் முருகனின் பெருமை பேசப்படுவது அறியலாம். தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான அந்தாதி வடிவில் அமைந்தது "முருகன் அந்தாதி" எனும் இந்நூல். ஒரு செய்யுளின் இறுதியிலுள்ள எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும் அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதியாகும். இவ்வந்தாதியில் மேலும் ஒரு சிறப்பு என்னவெனில் 'புடவி' என்கிற சொல்லில் முதல் அடி ஆரம்பித்து கடைசிப் பாடல் 'புடவி' என்றச் சொல்லில் முடிவுறுவதாகும். அந்தாதி என்பதைச் சிலர் 'முடிமுதலி' என்கின்றனர்.

இச்சுவடி நல்ல நிலையிலேயே உள்ளது. ஓலையின் நீளம் சுமார் 44 செ.மீ, அகலம் 2.8 செ.மீ. ஏட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு பாடல்களும், சில ஓலைகளில் மூன்று பாடல்களும் காணப்படுகின்றன. பாடல்கள் வரி பிரித்துச் சீர்கள் எழுதப் பெறவில்லை. ஒற்று எழுத்துக்களுக்குப் புள்ளி கிடையாது. குறில் நெடில் வேறுபாடு அறிய முடியாதவாறு கொம்புகள் உள்ளன. ழ-ள. ற-ர, ன-ந போன்ற வேறுபாடுகள் இன்றி ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டு அமைந்துள்ளன. நூல் எழுதி முடித்த பின்னரும் ஒப்பிட்டுப் பார்த்து பிழை திருத்தப்பட்டுளது.

ஓலையின் இறுதியில் 'சுப்பிரமணிய சுவாமிபேரில் பதிற்றுப்பத்தந்தாதி முடிந்தது' என்ற ஒரு அடி உள்ளது. இருப்பினும் நூலின் முதல் ஓலையின் முதலில் முருகன் அந்தாதி என்றே உள்ளது. ஆதலால் நாம் அதனையே தலைப்பாகக்

பாடல்களின் பல அடிகளில் தோகைமலை, தோகை, வெற்பு என்ற சொற்கள் காணப்படுகின்றன. தோகைமலை எனும் மலை தற்காலம் சிவகங்கை மாவட்டத்துக் குன்றக்குடி ஆகும். 'நியமம்' என்று இந்நூலில் வருவது, குன்றக்குடிக்கு வடமேற்கே சிறுகூடல் பட்டி அருகே அமைந்துள்ள ஊர்.

நூலின் இறுதியில் பதிற்றுப்பத்தந்தாதி என்று இருப்பினும் அப்படி நன்நிலை நூலில் காண முடியவில்லை. காரணம் பத்துப்பத்து பாடல்கள் ஒரு சந்தத்தில் வர வேண்டும். ஆனால் இங்கு ஒரு பத்துப்பாடல்களிலே வேறு வேறு சந்தங்கள் விரவி வருகின்றன. இருப்பினும் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் அந்தாதி என வழங்கலாயிற்று.

பாடல்களில் முருகனது திருவுருவச் சிறப்பு, திருத்தோற்றம், வீரச்செயல்கள், திருவருள் நிறம், மற்றும் அவன் உறைந்துள்ள தோகைமலையின் எழில்நலம் போன்றவற்றைக் காணலாம். மேலும் முருகனுக்குப் பல பெயர்கள் கொடுத்து அழைப்பதை நாம் காணலாம். இதனை நாம் கந்தா, குகனே, முருகையனே, சண்முகநேசா, குமரா, சரவணனே, விசாகனே, குகவேளே, குமரேசா, குமரகுருபரா போன்ற பெயர்களிலிருந்து அறியலாம்.

தொன்மக்(புராணக்)கதைகளும் இடையிடையே விரவி வருதலை நாம் காணலாம். பிரமனைச் சிறையில் அடைத்த விவரமும், தந்தைக்கு உபதேசம் செய்தமை, வள்ளி, தெய்வானை திருமணங்கள் போன்றவை வருதலால் இதனை அறியலாம்.

கொள்ளவேண்டும். காரணம் சுவடிகளின் ஆரம்பத்தில் இடதுபுறம் எழுதப்பட்டுள்ளதையே தலைப்பாகக் கொள்ளுதல் மரபாகும்.

பாடல்கள் அனைத்தும் நான்கு அடிகளில் அமைந்துள்ளன. நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர், காலம், ஊர் முதலான விவரங்கள் எவையும் அறிய இயலவில்லை. நூலின் முதலிலோ, இறுதியிலோ ஒற்றை ஏடுகளிலோ இவை பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. இதுபோன்ற குறிப்புகள் கிடைக்காததால் இது முதல் ஏடா அல்லது வழி ஏடா என்பதை யூகிக்க இயலவில்லை. சில பிழைகளைத் திருத்தி அமைந்துள்ளதை நோக்கும் பொழுது அதுவழி ஏடாகவே இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அப்படியும் ஏடு எழுதியவரின் பெயர் எங்கும் குறிக்கப் பெறவில்லை.

இங்குள்ள பலசுவடிகள் காலம் அறிய முடியாதவாறு இருப்பினும், இச்சுவடியில் சில குறிப்புகள் உள்ளன. முன்புறமுள்ள ஒற்றை ஏடு ஒன்றில் திருந்து சித்திரபானு வருஷத்தின் மீதின், செனித்திரு ஆவணி தேதி மூன்று குரு என்ற குறிப்பு உள்ளது. இதனைக் கொண்டு நாம் சித்திரபானு ஆண்டு ஆவணிமாதம் மூன்றாம் பக்கல் (நாள்) அதாவது 1882 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ந்தேதி வியாழக்கிழமை எழுதப்பட்டதுஎன அறியலாம். ஆயினும் இதனை உறுதியாக நாம் கொள்ள இயலாது. காரணம் இதுவே நூல் படி எடுக்கப்பட்ட காலமாகக் கூட இருக்கலாம். இருப்பினும் 1882 ஆம் ஆண்டோ அல்லது அதற்கு முந்தியோ இதன்காலம் அமையும்.

நூலில் காட்டப்படும் தோகைமலைக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப்படுதலை நாம் காணலாம். மயில்மலை, சின்மலை, மயிலாட்சிச்சிலை, தோகைமலை, துங்கைமலை, செகண்டி, நியமை நகர் போன்ற பல பெயர்கள் வழங்கப்படுதலைக் காணலாம்.

நூலிலுள்ள பாடல்கள் அனைத்தும் இலக்கிய நயம் மிகுந்தவை. எளிய உவமைகளும், உருவகங்களும், ஓசை நயம் மிக்க தொடர்களும் அமைந்துள்ளமை படிக்கப் படிக்க இன்பத்தைத் தரவல்லவையாக உள்ளன. மேலும் தமிழாலே வழிபாடு (அர்ச்சனை) இயற்றிய முறைமையும் காணமுடிகிறது. சான்றாக,

"பாதத்தாமரை மேலர்ச் சித்தே தமிழே
பாடிப் பூசனையே புரிவோர்"

எனும் அடிகள் இதனை உணர்த்தும்.

செய்திகள் பலவும் கொண்டு திகழும் இந்நூல் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றது. பாடல்களின் இடையிடையே பெண்ணாசை விலக்கல், வாழ்வு நிலையாமை, இறைவனின் அருள் வேண்டுதல், மேலான வீடுபேறு கிடைக்க வேண்டுதல் போன்ற செய்திகள் காணக்கிடக்கின்றன.

இங்ஙனம் பல்வேறு வகையில் சிறப்புடன் விளங்கும் இச்சுவடியைப் பதிப்பித்து வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். முருகன் பெயரில் அமைந்த இலக்கியங்கள் பலவற்றை நாம் காணலாம். தமிழரின் கடவுள் எனச் சிறப்பிக்கப்படும்

அவனின் மீது நூற்றுக்கணக்கான நூல்கள் எழுந்துள்ளன. அவற்றைப் பலரும் பல்வேறு கால கட்டங்களில் படைத்துள்ளனர். அவற்றுடன் இந்நூலும் அத்தகு கடவுளின் அரிய பெரிய செய்திகளை அறிவிப்பதில் கொஞ்சம் கூட குறைவுபடவில்லை என்பதை நாம் நூலைப் படிக்கிறபோது தெரியவரும். இந்நூல் தமிழரின் அரிய இலக்கிய படைப்பாற்றலுக்கு மேலும் ஒரு எடுத்துகாட்டாகும். இந்நூல் வெளிவர எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எனதருமைக் காப்பாட்சியர் முனைவர். திரு. சு. சௌந்தரபாண்டியன் அவர்களுக்கு என்றென்றும் என் நன்றி உரித்தாகும்.

இவண்
வ. நாகராசன் எம். ஏ, பி. எட்
தமிழ்ப்புலவர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
(மற்றும்) ஆய்வு மையம்
சென்னை - 5

# முருகன் அந்தாதி

(விருத்தம்)

1. புடவி முழுதும் விளையமழை
 பொழியு முகில்க ளனுதினமும்
நடவி யுலவ முடிவளருந்
 நனிகொள் மயிலின் வரையதிபா
மடவி குறமின் மகபதியின்
 மருவு கணவ ருமைபுதல்வா
தடவி கட(வ)வு (லி)ளிபமுகவர்
 தமது துணைவா குகவேளே.

(சொற்குறிப்பு)

புடவி - பூமி
முகில் - மேகம்
நனிகொள் - பெருமை கொண்ட
வரை - மலை
மடவி - பெண்
மகபதி - இந்திரன்
கடவல் - செலுத்தல்
இபம் - யானை
கணவும் - கூடும்.

(கருத்து)

மண்ணெல்லாம் விளைய மழை பெய்கின்ற மேகம், நாளும் நடந்து உலவுகின்ற, மயில்கள் வாழ்கின்ற பசுமையான உயர்ந்த மலைகளை யுடைய முருகனே! இந்திரனின் மகளுடன் குறப் பெண்ணையும் அணைந்து அவர்களுக்குக் கணவரானவனும் உமையாள் பார்வதியின் குமரனே! வாழ்கின்ற பசுமையான உயர்ந்த மலைகளையுடைய முருகனே! இந்திரனின் மகளுடன் குறப் பெண்ணையும் அணைந்து அவர்களுக்குக் கணவரான உமையாள் பார்வதியின் குமரனே! மெய்யுணர்வுடன் தடவி யானையைச் செலுத்துகின்ற விநாயகனின் துணைவா! வேலைக் கொண்ட முருகனே!

இதில், மலையின் வளம், குணத்தால், செயலால் இருவகைப்பட்ட பெண்களை மணமுடித்ததால் அவனின் ஏற்றத் தாழ்வற்றப் பண்பு, உடன் பிறந்தான் பாசம் முதலியவற்றை அறியலாம்.

2. **வேளே யமரர் சிறைவிடவே**

**வேலே வியபன் னிருபுயனே**

**வாளே யனைய விழிமடவார்**

**மாலே பெருகும் வடிவழகா**

**நாளே யகல யிருவினைதான்**

**நானே முயல்வன் யெனைநீ**

**தாளே யருளி யடுமைகெள்வாய்**

**தாளே னொருவர் ச(ன்)னதியிலே.**

(சொற்குறிப்பு)

அமரர் - தேவர்

தாள் அருளி - திருவடிகாட்டி

விய - பெருமை

அனைய - ஒத்த

(கருத்து)

தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க வெம்மையான வேலினை ஏந்தியப் பன்னிரண்டு கைகளைக் கொண்டவனே! வாள்போன்ற கூரிய கண்களைக் கொண்ட பெண்கள் உன்மேல் ஆசை

கொள்ளும்படி அமைந்த பேரழகு பெற்றவனே! இருவினைகளால் சூழப்பட்ட, எனது வாழ்க்கை நாள் நீங்க, நான் முயற்சி செய்கிறேன். நீ உனது திருவடிகளைக் காட்டி உடனடியாக என்னை உனது அடிமையாக ஏற்றுக் கொள்வாயாக.

இப்பாடலில் வேலின் வலிமையும், தேவர்களுக்கு விடிவைக் கொடுத்த பேரருளும், அன்பரிடம் காட்டும் பரிவும், அவனின் கண்கொள்ளாப் பேரழகும் காணலாம்.

3. நதியி லுதித்த வர்பா
 லாவியை நிகர்த்த திரவேலா
கதியி லுயர்த்த நிறைசீலர்
 கடின வரக்கர் குலகாலர்
நிதியி லுயர்த்த குமரேசா
 நியமை நகர்ச்சண் முகநேசர்
பதியி லுயர்த்த வடியார்கள்
 பாலருட் செய்திடுவாயே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| நிகர்த்த | - | ஒத்த |
| கதி | - | வீடுபேறு |
| சீலர் | - | நல்லறிவாளர் |
| காலர் | - | இயமன் |
| நியமை | - | தவம் |
| நகர் | - | கோயில் |

(கருத்து)

சண்முக நதியிலே தோன்றிய சிறு குழந்தை, வேலினைக் கையிலே கொண்டவன். ஆன்மாவை வீடுபேறு அடையச் செய்யும் நிறைந்த நல்லறிவாளன். கொடிய மனம் படைத்த அரக்கர் குலத்திற்கே இயமனாகத் தோன்றியவன். தவமுடைய, கோயில் கொண்ட குமரனாகிய முருகன், அவனின் பக்தர்கள் நிதியில் உயரவும், மேலான பேரின்பத்தை அடையவும் அருள் புரிந்திடுவான்.

நீரிலே எழுந்த அவன் கொடுமையே செய்கின்ற அரக்கர்களுக்குக் காலனாகவும், அன்பு செய்யும்

அடியார்க்கு அருள் புரிபவனாகவும் இருப்பதை இப்பாடல் உணர்த்துகின்றது.

4. இடுவர் அன்னம் வறியருண
யிகல முன்னை வினைகளைவர்
நடுவர் ருன்னு மிகுபுகழை
நலிய ரென்ன பகைவரினும்
உடுவார் கம்ம லெனவழையு
மொருசூ ரென்னு நிசிசரனை
யடுவார் வண்ண மயில்முருகா
அடியே நண்ணு பரிகுணரே.

(சொற்குறிப்பு)

முன்னை வினை - முற்பிறவியில் ஆற்றிய நல்வினை, தீவினை.

நலியர் - ஒழியார்

கம் - அறிவு

நண்ணு - கிட்டுதல்

(கருத்து)

அறிவற்ற இழிந்த குணம் கொண்ட சூரபத்மன் எனும் ஒரு அரக்கனைப் போரிட்டு வென்றவன்.

மயிலை வாகனமாகக் கொண்டவனே! உன் அடியை அறியும் குணத்துடன் நாடும் அடியார்கள் முன் செய்த வினைகளையெல்லாம் களைய பெறுவர். தாம் என்ன இடையூறு அடையினும் உன் மேலான புகழை நிலை பெறச் செய்வர். வறியார்க்கு உணவிட்டு அவர் பசிப் போக்குவோர்க்கு நல்ல பரிசாக உன்னையே (அருள்) கொடுப்பாயாக.

உணவிடும் பழக்கம், அடியார்களின் கடும் முயற்சி, நல்லோர்க்கு அருள் வழங்கும் பாங்கு முதலியவற்றை நாம் காண்கிறோம்.

5. பரிச நாதி யிதையமிசை
 பழகு மாய்கை வினைகளற
தரிச னாதி வாமுதலி
சேயும் யூர துரகபதி
விரிச னாதி சனகர்தமிழ்
 விமல ஞான முனிகுரவர்
கரிச னாதி யொடுகுறவர்
 கனிகை மேவு முருகையனே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| தரிசனம் | - | காட்சி |
| கரிசனம் | - | அன்பு |
| துரகம் | - | குதிரை |
| குரவர் | - | பெற்றோர் |
| விமலன் | - | சிவன் |
| நாதி | - | ஒலித்தல் |

(கருத்து)

மனத்தைமயக்குகின்றதும், நெஞ்சிலே பழக்கப்பட்டுப் போன கெடுவினைகள் அற்றுப் போகும் படி காட்சியை நல்குகின்றவனும், பேருதவியைச் செய்கின்றவனும், மனமென்னும் கோயிலில் இருப்பவனும் அமிழ்த மொழியாம் (மூலமந்திரம்), தந்தை போன்ற மூத்தவருக்கே பயிற்றுவித்தவனும், அன்பு கொண்டு குறவர்மகள் வள்ளியைச் சேர்ந்து வாழ்கின்றவனாம் குமரேசனாகிய முருகன், பெருமைக்குரிய வனாவான்.

முருகனின் அளவில்லா அருளையும் தந்தைக்கே மந்திரம் உரைத்ததால் முழுமுதற் கடவுள் என்னும் தன்மையும் இங்கு சுட்டப் படுவதைக் காணலாம்.மனித மனம் கெடுதலை நினைக்கினும், அதனிலிருந்து அதனை விடுபடச் செய்யும் அவனருள் சுட்டப்படுகின்றது.

6. கயத்தை யுரித்த உடையாளி
கடுக்கைத் தரித்த சடையாளி
நயத்தை யுரைக்க மறைநாளும்
நவிற்று குருக்கள் மிகுதேவர்
பயத்தை யுறச்செய் தெதிர்சூரர்
பலுக்கை மடக்கி யமரரொடு
செயத்தை யுயர்த்த நவவீரர்
செய்த்த துணைச்சண் முகனாமென.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| கயம் | - | யானை |
| கடு | - | பாம்பு |
| பலுக்கை | - | வலு |
| நவிலல் | - | சொல்லல் |
| சடையாளி | - | சிவன் |

(கருத்து)

யானைமுக அரக்கன் கயாசுரனின் உடலைக் கிழித்துத் தோலினைப் போர்த்தியவன்; பாம்பினைச் சடையில் அணிந்த சிவனுக்கு நன்னெறிகளை, பிரணவமந்திரத்தை (மூலமந்திரம்) உரைத்தவன். மறைகளை ஓதும் நற்குணம் படைத்தவர்களாகிய அறிஞர் மற்றும் தேவர்கள், அசுரர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து நடுங்கி இருந்தனர். அவர்களின் அச்சம் போகும் வண்ணம் நல்வீரர்களின் துணையுடன் அரக்கர்களின் வலிமையை வென்று வெற்றியைத் தேடித் தந்தவன் சண்முகன் என அறிவோம்.

இங்கு தந்தையாகிய சிவனின் தோற்றம், கயாசுரன் கதை,வேலவனின் மறம், அசுரர்களின் வலிமை முதலியவற்றைக் காண்கிறோம்.

7. முகநா லுடைய பிரமனையும்
முனிதே சிகனை நிறுவுசத
மகாநா டரிகு லிசனருள்
மடமான் மருவு குருபரனை

செகநா யகனை மயிலிலெழு
செயவே லவனை யனுதினமும்
அகனா வுடல நினைவுதுதி
யடிதாள் முறைமை புரிகுவேன்.

(சொற்குறிப்பு)

முனிதே - வெறுத்தே
சதமகன் - தேவேந்திரன்
குலி - மனைவி
அகன் - உள்

(கருத்து)

படைக்கும் கடவுள் எனச் சொல்லப்படும் பிரமன் அதற்குரிய மந்திரம் என்னவென்று அறிந்தானல்லன். அதனை வெறுத்து நாட்டுமக்கள் அறியும் வண்ணம் பொருள் உரைத்தவன் முருகன்.

இந்திரனின் மகளும், மான்போன்ற மென்மையான உடலையுடைய தெய்வானையை மனைவியாகயுடையவன். உலகத்திற்கே ஆதாரமாக உள்ளவன். மயிலை வாகனமாகக் கொண்டவன். வெற்றியைத் தரக்கூடிய வேலினைத் தன்னகத்தே

கொண்டவன். அப்படிப்பட்ட முருகனை நாளும் எனது மனத்தில் எண்ணி அவனது அடியினைத் தொழுவேன்.

தவறுகண்டவிடத்துப் பெரியோர். சிறியோர் என்று பாராது தண்டிக்க வேண்டும் எனும் உயர் கோட்பாட்டை நாம் இங்கு காண்கிறோம்.

8. புரியுங் கருணை யெனவடியர்
புகழுங் சரண ரமரர்சிறை
பரியுங் கதிரின் உலவுமறை
பரவும் பன்னிரு புயசயிலா
வரியுங் கொண்டையு மனையவிழி
வயவுங் குறமின் னைகணவர்
தெரியுங் கனவு நினைமதி
செயல்கொண் டவரு ளுறைகுவரே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| பரி | - | வழி |
| கதிர் | - | சூரியன் |
| வரியும் | - | வரிகள் கொண்ட |
| வயவு | - | ஈர்த்தல் |
| சயிலா | - | வெற்றியைக் கொண்டவன். |

(கருத்து)

அடியவர் நின் கருணையை அடைய வேண்டும் என்று உன்னைப் புகழ்ந்துப் பேசுவர். தேவர்களைச் சிறை மீட்டவன். உலகுவாழ் உயிர்களுக்கு ஒலியைத்தரும் சூரியனைப் போன்று மறைகளுக்கு விளக்கம் தந்தவன். வெற்றியையுடைய பன்னிரண்டு கைகளைக் கொண்ட தோளினையுடையவன். வரிகள் கொண்ட கெண்டையையொத்த ஈர்க்கும் கண்களைக் கொண்ட குறமகள் வள்ளியின் கணவன். என்னுடைய கனவில் கூட அருளை அருளுவான்.

முருகனின் பெருமையும், அவனின் அடியார்க்குக் கனவில் கூட அருள்தரும் நிலையையும் நாம் இங்கு காண்கிறோம். பெண்களின் கண்கள் மீனுக்கு ஒப்பிடுதலைக் காணலாம்.

9. உறையு மளையைத் திருடியுண
 உரலில் அணையச் சுதன்மருகா
நிறையு மவனை அருணியர்தாம்
 நிதமு மயலுற் றிடுவடிவே

திறையு முடிவைத் தடிதொழுமரர்
திசையு ளடியார்க் கருள்குமரர்
அறையு மறிவில் கவலையதே
யணுகு மிடியைக் களைகுவையே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| உறையும் | - | உறைகின்ற |
| அளை | - | தயிர் |
| (அச்)சுதன் | - | திருமால் |
| அருணியர் | - | நற்குணவர் |
| திறை | - | வரிப்பொருள் |
| மிடி | - | வறுமை |
| திசை | - | நிலை |

(கருத்து)

நல்ல மனம் கொண்டவர் நாளும் வணங்கிடும் முழுமையான வடிவினன். திண்மையான உன் அடித் தொழும் அன்பர்களின் வறுமையாகியத் துன்பத்தைப் போக்குவாய். ஆயர்கள் தங்கள் மனையிடத்து உறையவைத்துள்ள தயிரிலுள்ள வெண்ணெய்யைத் திருடியுண்டு, அதனால் யாதவப்

பெண்களிடம் கட்டுண்ட மாயோன் திருமாலின் மருகன். நல்லவர் நாளும் அவன் மேல் ஆசை கொள்ளும் வண்ணம் அழகுப் படைத்த வடிவேலன்.

ஆசிரியர் சந்தம் நயம் மிக்க உறை, நிறை, திறை, அறை எனும் சொற்களைப் பெய்து பாடலின் ஓசை நயம் மிகுவது நோக்கற்பாலது. கண்ணனின் உறிக்கதை பேசபடுதலைக் காணலாம்.

10. குவையா ருபைய வினையின்வலி
 கொடுபூ வுலகில் மறுகியிடு
கவையார் மனது கெடவறிவு
 கதிரா யிலக வருளியெனை
செவையா ரடுமை கொளவருவை
 சிகிமா மலையில் மீதமர
அவையா ரரசு புரி(ச)முக
 வயிலா குமர குருபரனே.

(சொற்குறிப்பு)

குவை - கூட்டம்

மறுகு - மனக்குழப்பம்

கவை - எண்ணச்சிதறல்

இலக - ஒளி செய

புரிசை - மதில்

புரிமுகம் - கோபுரம்.

(கருத்து)

மதில்சூழ்ந்த கோபுரங்களைக் கொண்ட சிகிமா மலையில் அரசுபுரிகின்ற குருபரனே! கொடுமையான பூமிதனில் என் மனத்தை, நான் முற்பிறவியல் செய்த வினையின் பயன் கூட்டமாக வந்து குழப்புகின்றது. குழப்பத்தினால் சிதறுண்டு போன எனது மனத்தை சூரினனைப் போல ஒளி பெற்று விளங்க, ஒரு நிலைப்படுத்தி அறிவு தெளிவு பெறச்செய்வாய். செவ்வனே என்னை அடிமை கொள்வாய்.

மாயையான சிற்றின்ப வாழ்வில் கிடந்து உழலுகின்றது உயிர். அவ்வுயிர் அதிலிருந்து விடுபட வேண்டுகிறதை நாம் இங்கு காண்கிறோம். மனத் தெளிவு சூரியனுக்கு ஒப்பிடப்படு தலைக் காணலாம்.

11. பரத்தினி லறிவி ருக்கவுமுது
பவத்தினை விலக வுமீறு
தரத்தினி லுன்திணைப் பதமலர்
தரிக்கவு மிகமறு காசை
அரத்தினி லெதிர்வெறுக் கையதென
வகற்றவு மேதின னாடு
கரத்தினி லயிலெடுத் தசுரர்கள்
களத்திடை யறயடர் சேயே.

(சொற்குறிப்பு)

பரம் - கடவுள்
பவம் - பாவம்
அயில் - கைவேல்
அடர் - சண்டையிடல்
இகம் - உலகம்
அரத்தினி - அறத்தினில் - அறத்தோடுபட்ட
வெறுக்கை - செல்வம்.

(கருத்து)

கைகளில் வேல்கொண்டு, கொடிய அரக்கர் களைப் போர்க்களத்தில் சண்டையிட்டு அவர்கள்

அற்று போகும் படிச் செய்த குழந்தை வடிவினனே! எப்பொழுதும் எனதறிவு இறைவனிடம் இருக்க வேண்டும். எனது மனது முன்வினைப் பாவங்களை மீள மறுப்பதை நீக்க வேண்டும். எனது மனத்தில் எப்போதும் உனது திருவடியே நிற்க வேண்டும். அறத்திற்கு மாறுபட்டு கிடைத்த பொருள்மேல் உள்ள ஆசை விலக வேண்டும். இவற்றின் மீதே எனது மனம் மிகுந்த ஆசைக் கொள்கிறது. தருவாயாக.

பொருள் தேடுவதில் பல வழிகள் இருப்பினும் அறத்துடன் பெற்ற பொருளே சிறந்தது என்பதை ஆசிரியர் இங்கு கூறுவது நோக்கற்பாலது. முருகனிடம் பற்றுக் கொண்ட அடியவர் அப்படிப்பட்ட பொருளையே விரும்புவார்கள் என்பது தெரிகிறது. "தீதின்றி வந்த பொருள்" என வள்ளுவர் கூறுவதை உன்னுக.

12. சேயென நதிமே லாவுமை
    தேடி யுமுலை தரவுண்டு
  தாயென வளர்சே வலாபிறை
    தாவிய சிகிவ ரைநம்பா

வேயென வொளிர்தோ ளிவைன்
வருவி ம(ண)னமி டுகந்தா
நீயுன திருதாள் பணிந்தவனை
முகனே எனவருள் தந்தார்.

(சொற்குறிப்பு)

சேய் - குழந்தை
வேய் - மூங்கில்
வெருவி - மருட்சி
சிகி - மலை

(கருத்து)

நதியில் தோன்றிய உன்னை, உமை நாடிப் பால்தர உண்டு வளர்ந்தவன். சேவல் கொடி உடையவன். வானில் நிலவும் நிலவையொத்த, மலையை ஒத்த தோள்களைக் கொண்டவன். மனத்திலுள்ள மருட்சியைப் நீக்குவாய் உனது திருவடிகளைப் பணிந்த அடியவர்களுக்கு அருள் உரைகள் காட்டுவாய்.

இப்பாடலில் முருகனின் தோள் கொண்ட ஒளிர்வுக்கு மென்மையும், வலிமையும் கொண்ட மூங்கிலை உவமை காட்டியுள்ளமை நோக்கற்பாலது.

13. தந்தார் மயனினை யன்றே மதனெதிர்
தந்தா னுருகின் னம்நீ ரமிதே
வந்தார் கலவி புரிந்தார் நிதநிதம்
வந்தா ரணியு தென்முலை தானே
விந்தார் மனைவியர் கண்டால் முனிவு
பேறுந் தெறுத லெனசொல் லுவாரோ
சிந்தா ரத்தனை வென்றேம யில்வருஞ்
செஞ்சே வலாதி ருமுரு கோனே.

(சொற்குறிப்பு)

மயன் - தேவதச்சன்.
கலவி - கூடுதல்
முனிவு - வெறுப்பு
நிதநிதம் - நாளும்

(கருத்து)

மயிலை (வாகனமாகவும்) ஊர்தியாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்ட முருகையனே! அழகான வடிவமைப்புகளுக்குச் சொந்தக்காரன் மயன். மன்மதன் போன்ற அழகனைப் படைத்தவன். அவ்வளவு அழகு கொண்டவன் முருகன்.

சரவணப்பொய்கை என்னும் நீரிலே தோன்றியவன். வருவான் கூடிக் குலாவுவான். இதனை அணிகலன்களணிந்த தேவ மகளிர் வெறுக்கார். தாங்கள் பெற்ற பெரும் பேறாகவே கொள்வர்.

அழகிலே சிறந்தவன் அறிவிலே வல்லவன், குறும்பு செய்வதில் கெட்டிக்காரன் முதலிய அவனின் குணநலன்கள் காட்டப்படுவதைக் காணலாம். தேவ தச்சன் மயனும், காமராசன் மன்மதனும் பேசப்படுதலை அறியலாம்.

14. கோனென் றுலக மீரே ழுந்தொழு
மனுகூ லன்சிகி வரைநிலை யுற்றே
பானென் றுயரடா வேலன் சிவனருள்
பாலன் பிரண வமொழி பெற்றோன்
மீனென் றுறுவிழி யாள(வள்) குஞ்சரி
புயமே வுங்குரு பாண்டி யர்க்கே
நானென் றுரையக மாய்ந்த அரிய
ஞானந் தருகு வனொரு மித்தே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| கோன் | - | இறைவன் |
| குஞ்சரி | - | பெண்யானை |
| பிரணவமொழி | - | படைப்பு மந்திரம் |
| பாலன் | - | சிறுவன். |

(கருத்து)

சிவனின் அருள் முழுமையும் பெற்ற குழந்தை வடிவானவன். இமிழொலி (பிரணவம்) பெற்றோன். பதினான்குலகங்கட்கும் அவனே தலைவன் என்ற பெருமை பெற்றவன். தன்னை வணங்குகிறவர் களுக்குத் துணையாகயிருப்பவன். மீன்போன்ற கண்களைக் கொண்ட தெய்வானையின் தோள் களைத் தழுவுபவன். பாண்டியப் பதியில் விளங்கும் தலைவன். நான் என்ற ஆணவம் என்னிடமிருந்து நீங்க ஞான அறிவை, உனதுள்ளம் குளிர்ந்து அளிப்பாயாக.

தெய்வானையின் கண்கள் மீன்களைப் போன்று ஒளி பொருந்தினவாய் அழகிய வண்ணம் உள்ளது என்பதைக் கூறுவது நோக்கற்பாலது.உலக

முதல்வன், அடியவரை அணைக்கும் பண்புடையவன் முருகனாவான்.

15. மித்தை யேதரு மிச்சை யேசெல
விட்ட மாமன மறஞான
வித்தை யேபர நிட்டை யேசுக
மிக்க வேயடி யவனாடு
சித்தை யேயரு ளிச்செய் வாயே
சிவசிற் பரர்திை னவன்மீது
தத்தை யேகடி பொற்பி னாளனை
சற்கு காமயில் மலையோனே!

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| பரநிட்டை | - | நிலைபரம் |
| சித்தை | - | ஞானம் |
| தத்தை | - | கிளி |
| மித்தை | - | பொய் |

(கருத்து)

கிளியொத்த வள்ளியை மணந்தவனே! மயில் உலாவுகின்ற மலைமீது அமர்ந்தவனே! நிறைந்த

பொய்யும், உலக இன்பத்திற் ஆசையும், காமமும் மிக்கு எனது மனம் உழல்கின்றது. சிற்றின் பத்தில் உழலும் என்மனத்தை அதிலிருந்து விடுபடச் செய்து என்றும் நிலைத்திருக்கும் ஞானமாகிய பரம் பொருளை எனக்கு அருள்வாயாக.

புலவர்கள் தங்கள் பாடல்களில் உவமைகளைக் கையாண்டு பாடல் பொருளை நயம்பட உறைப்பது தமிழ் மரபு. இங்கு வள்ளிக்கு கிளியை உவமையாகக் காட்டியுள்ளமை நோக்கற்பாலது. பரம்பொருள் அடைவதே நிலையானது என்பதைச் சுட்டுகிறது.

16. மலைத்தி டுபிணி வருத்தி டவுயிர்
மடித்தி டசட நெடுநாளு
நிலைத்தி டுமென யிகத்துழ லுமென
நினைப்பற வுன்திருத் தாளிலினை
அலைத்தி டுமறி விருக்க வுமினி
யருட்பர கதிதர வேளே
சிலைத்தி டுநிரு தரைப்பொ ருதிய
சிகிச்சி லையுறை குமரோனே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| மலைத்திடு பிணி | - | கொடுநலிவு |
| உழலுதல் | - | மனஞ்சுழலல் |
| சடம் | - | உடல் |
| அலைத்திடும் | - | நிலையற்றத்தன்மை |
| நிருதர் | - | அரக்கர் |
| பொருதிய | - | சண்டையிட்ட |

(கருத்து)

மண்ணுலகில் உடலை நோவச் செய்யும் நோய், உயிரை நீக்கி யாக்கையை அழித்துவிடும். ஆனால் என் மனமோ இவ் யாக்கை அழிவு நிலையின்றி நீடு நிலைத்திருக்குமென்று நினைக்கின்றது. அத்துன்ப நினைவில் என்னை அலைய விடுகின்றது. சிகிமலையில் வாழ்கின்ற, அரக்கர்களைப் போரிலே வென்ற வேலா, என் மன இருளைப் போக்கி மேலான வீடு பேற்றினைத் தருவாயாக.

யாக்கை நிலையாமை என்ற உயரிய உண்மைக் கோட்பாடு இங்கு பேசப்படுவது நோக்கற்பாலது. அரக்கர் அழிந்தது போல் கெடு மனதுடல் அழிதலைக் குறிக்கிறார்.

17. குமரோன் சிகிவரை வாழ்ந்திடு

குகவாங் கயனிருதாள்

சமரோன் சரவண மாஞ்சுனை

தருசந்தனம் யிலர்பாலே

அமரோன் சிவனுமை தோன்றலி

னருள்பூண் டவரிடமோ

நமரோன் சினமிசை யானகதி

நனுமீண் டியலுடனே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| அயன் | - | நான் முகன் |
| சமரோன் | - | போர்வல்லோன் |
| சுனை | - | நீர் |
| அமரோன் | - | தேவன் |
| நமரோன் | - | இயமன் |

(கருத்து)

சரவணப் பொய்கையில் தோன்றியவன். சிவன் உமை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவன். மலையில் வாசம் செய்பவன். நறுமணமுள்ள சண்முகநதியில் வளர்ந்தவன். உன் பெற்றோர்களின்

அன்பைப் பெற்ற அடியாரைக் காலன் தொட மாட்டன். மார்க்கண்டேயனின் கதையே இதனை உலகிற்கு விளக்கும்.

சிவபதம் வேண்டிப் பெற்ற அடியாரைக் காலன்கூட நெருங்கான் என்பதை நாம் உணர் கிறோம். இங்கு மார்க்கண்டேயன் கதை சுட்டப் படுகிறது.

18. இயலு நிலைம கள்மகு டமென
வளமில குநியம நகரத்தில்
புயலு மதியமு ழுலவ முடிவளர்
புனித மயில்வரை யிடநித்தம்
மயலு முறுதியு மருவு கொலுவிரு
பாத முருகையன் அருள்பத்தர்
செயலு முடல முழுயிரு மலிதரு
திருவு மொருபடி நிலைபரவாம்.

(சொற்குறிப்பு)

நிலைமகள் - பார்வதி
மகுடம் - சிகரம்
புயலும் - மழைக்கோள்

மயலும் - மயக்கம்

மருவு - வாசனை

திருவும் - செல்வமும்.

(கருத்து)

நிலைத்த பெருமைக்குச் சிகரமாகவும், வளமைகள் உருவாகும்வண்ணம் ஒரு கையில் மழைவழங்கு கோளினை உடையவராக உள்ளான் முருகன். அவனுக்கு நீண்ட நெடிய தோகைகளைக் கொண்ட மயில் வாகனமாகவுள்ளது. நற்செயல்கள் செய்யும்படி நல்ல சிந்தனையும், வளமான உடல்நலத்தையும், செல்வத்தையும் வழங்குவான். ஆதலால் அவனை நாளும் போற்றுகிறோன்.

அனைத்திற்கும் சொந்தக்காரனான அவன் அடியார்க்கு வளமான வாழ்வையும் தருவான் என்பதை இப்பாடல் வழி நாம் அறியலாம். நன்மையே செய்யும் அவனை நாளும் போற்றுதல் தகும்.

19. பற்றுவதுநின் சேவடி செப்புவதுநின் பேருரை
பட்சமொடு வந்தெதிரி வலமாக

சுற்றுவதுநின் கேகய வெற்பதனையன் பாறுதல்

தொட்டணிவதுன் பூதியை யதனாலு

மெற்றுவதுவன் தீவினை எட்டுவதுமொன் றாமென

தீட்சையிது தெ(ய)ன்பானது நிசமாகு

முற்றுவதுமுன பேபிறை வைத்தசடிலன் தேடிய

முத்தியுள கந்தர்பரி புரபாதா.

(சொற்குறிப்பு)

சேவடி - மலரடி

கேகயம் - மயில்

மெற்றுதல் - நீங்கல்

தீட்சை - ஞானம்

சடிலன் - சடையையுடையவன்.

(கருத்து)

நாள்தோறும் நான் பற்றுவேன். உனது திடுவடியை நான் பேசிப்பேசி மகிழ்வது உனது பெருமைக்குரியப் பெயரை. நாளும் உனது மயில் சூழ்ந்த கேகய மலையை வலம் வருவேன். நான்

நெற்றியில் அணிவது உனது திருநீற்றையே. நான் தீவினைகளை நீக்குவேன். தீக்கையை ஏற்பேன். உன்மீது கொண்ட நிலைத்த அன்பே உண்மையான அன்பாகும். பிறைசூடிய பெருமான் சிவனாரின் குமரனே. இதுவே இப்பூவுலகில் நான் ஏற்றப் பணியாகும்.

தமிழின் சிறப்பெழுத்து 'ற' வை அடிகளின் முதற் சொற்களில் பெய்துள்ள பாங்கு நோக்கத்தக்கது. முக்தியளிக்கும் அவனை போற்றுதல் அடியவர் கடமையே.

20. பாதத்தாமரை மேலர்ச்சித்தே தமிழே
    பாடிப் பூசனை யேபுரிவோர்
    போதத்தா லறியாஞானத் தேசிகனார்
    பூசத் தேர்தின மேலெழுவோர்
    சூதத்தா லெதிர்சூர் மாவைக்கூறிடுவோர்
    தோகைச் சாரலில் வாழ்பெருமாள்
    சீதத்தா லளிசூள் நீபத்தாரணிவோர்
    சீராக் காத வானவரே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| ஆசித்தல் | - | விரும்பல் |
| பூசனை | - | வழிபாடு |
| போதம் | - | அறிவு |
| தேசிகன் | - | குரு |
| சூதம் | - | சூது |
| சீதம் | - | அகில் |
| நீபத்தார் | - | கடம்பமாலை |

(கருத்து)

உன் திருவடிகளை விரும்பி வாழும் அடியார் இனிய தமிழால் பாடி வழிபாடு செய்வர், சிற்றறிவினால் அறிய இயலா ஞானத்தை தரும் முருகா, நீ அவர்களை நாளும் உயரச் செய்வாய். வஞ்சனையே வடிவமாகக் கொண்டு வாழ்ந்த அரக்கன் சூரனை இரு கூறுகளாகப் பிளந்தவனே! மயில் மீதமர்ந்து தோகை மலையிலே வலம் வருகின்றவனே! மேலான வானவரால் போற்றப் படும் முருகா! வணங்குகிறேன்.

பண்டைநாளில் தமிழால் இறைவனுக்குப் பூசை இயற்றினர் என்பதை இப்பாடல் மூலம் நாம் அறிய வருகிறோம். சூரனை இரு கூறாக்கிய நிலை பேசப்டுகிறது.

21. நவமணி யழுத்து செம்பொன்
 கொடுமுடி தரித்த கந்தர்
 தவமணி மனத்தர் சிந்தை
 தனிலுறை பதத்த ரெந்தை
 சிவமணி தெ(கு)விட்ட வந்த
 சிகிவரை தளைத்த புஞ்சர்
 பவமணி சடத்தர் கொண்ட
 பழவினை யகற்று மன்பர்.

(சொற்குறிப்பு)

நவமணி - ஒன்பான் பொருள்
தவமணி - தவம் புரிவோர்
புஞ்சர் - திரட்சியோர்
பவமணி - அழிவு
சடம் - உடல்

(கருத்து)

கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம் ஆகிய ஒன்பான் மணிகளால் இழைக்கப்பட்ட பொன்முடி சூடிய முருகா! தவமேற்போர் சிந்தையில், நீங்காத இடம் பெற்றவன் நீ! தந்தை சிவபெருமானே உவகை கொள்ள வந்த, மலைமேல் இருப்பவனே! அழிவினைத் தரவல்ல உடலிலுள்ள வினைகளை எல்லாம் நீக்குகின்ற அன்பான குணம் கொண்டவனே! உன் புகழ் போற்றுவேன்.

நவம், சிவம், தவம், பவம் முதலிய சொற்கள் வேறுபட்ட பொருள்களில் வந்தாலும் அவற்றைப் பெய்து பாடலின் சந்தத்தையும் பொருளையும் மென் மேலும் மிளிரச் செய்வதைக் காண முடிகிறது. மேலும், முருகன் நல்ல உள்ளம் படைத்தவருடன் வாழ்பவன் என்பதும் குறிப்பு பொருள்.

22. அன்பிடு தொழும்பர் பாணி
யஞ்சலி புரிந்து நாளும்
முன்பிடு செகண்டி மேரில்
மொண்டழ கிலங்கு வேளை

என்பிடு புயங்க வேணி

யெந்தைசொல் கடம்பர் தாளை

வன்பிடு மிடும்பை தீர

வந்தனையே நெஞ்சு கூறும்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| பாணி | - | பற்று |
| தொழும்பர் | - | அடியார் |
| செகண்டி மேரு | - | செகண்டிமலை |
| புயங்கம் | - | தோள் |
| வேணி | - | வானம். |

(கருத்து)

அன்பு மேலிட உன்மேல் பற்றுகொண்ட அடியவர் தினமும் உன்னை வணங்குவர். செகண்டி மலையிலே வாழ்கின்ற அழகனாகிய எந்தையின் தாளை, எலும்புகளாலான தோள்களினால் வணங்குவேன். இப்பிறவியில் வந்து துன்பத்தைத் தரக்கூடிய துன்பங்கள் விலக வேண்டும் என எனது நெஞ்சு எப்போதும் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

வாழ்வில் துன்பம் விலக வேண்டும் எனில் செகண்டி மலையில் குடிகொண்டிருக்கும் முருகனை வணங்கினால் போதும் என்பதை இதன்வழி அறியலாம்.

23. கூறும் பழவினையே
கூடுஞ் சடலமதே
சேரும் பரமுனையே
சேரும் படியருள்வாய்
நேருஞ் சமணறவே
நீடுங் கழுவிடுவோய்
காரும் படிவரைமே
காரம் பயில்குகனே!

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| சடலம் | - | இழிஉடல் |
| பரம் | - | இறவாநிலை |
| நேரும் | - | நிகழ்வு |
| நீடு | - | நிலைத்தல் |
| கார் | - | நீர்மேகம் |
| காரம் | - | பொன் |
| சமணம் | - | புறச்சமயம் ஆறினொன்று |

(கருத்து)

துன்பத்தைத் தரவல்ல முன் வினைகளையே இவ்வுடல் நாடுகின்றது. துன்பத்தில் சேரும் என் ஆன்மாவை உனது பேரின்ப வெள்ளத்தில் சேரும்படி அருள் தருவாய். துன்பங்கள் அறவே நீங்கவும், புறச் சமயத்தார் மாறவும் அருள் புரிவாய். நீர் சூழ்ந்த மேகங்கள் உலவுகின்ற மலைமேல் இருக்கின்ற பொன்னாரம் அணிந்த அழகிய முருகனே! வணங்குகின்றேன்.

பிறமதக் காரரையும் தன் மதக்காரராகும்படி அருள் தரவேண்டும் எனக் கூறுவது நோக்கத்தக்கது. அன்பினால் அயலாரையும் அடையலாம் என்பது அறியப்படுகின்றது

24. குகனா ரெனது சிந்தை
குடியே றியக டம்பர்
சுகனா ருமைசு ரந்த
துணைமா முலைய ருந்து
மகனா ரிசைசெ கண்டி
வரைய ரதிபர்ம கிழ்ந்த

முகனா ரினிய கும்ப

முனிதாள் சரண ரெந்தை.

(சொற்குறிப்பு)

கடம்பர் - சுப்பிரமணியர்

குடி - உடம்பு

எறிய - ஒளி செய்ய

சுகன் - பெண்மோகம் அற்ற முனி (வியாசன் மகன்).

செகண்டி - செகண்டிமலை

கும்பமுனி - அகத்தியர்.

(கருத்து)

குகனே! எனது மனத்தில் ஒளி வீசச் செய்யும் கடம்பவன முருகா! உமையவள் முலைப் பாலுண்ட முருகா! கும்பமுனி எனப்படும் அகத்தியருக்குத் திருவடி காட்டி அருள் பாலித்த தந்தையையொத்த சரவணனே!

முனிவர்களுள் அகத்தியர் தமிழ்முனிவர் என்றே போற்றப்படுபவர். அத்தகைய பெரியோர்க்கே இளையோன் எனப் பேசப் பெறும் முருகன் அருள் தந்தான் என்பது கருததக்கது.

25. எந்தையார் தைப்பூ சத்தேர்
இன்பமா கத்தானுற் றூர
சிந்தையார் சடகோ ணத்தே
சென்றுவாழ் வுற்றோர் கற்றோர்
தந்தையார் சொற்கேள் விக்கே
தந்து சொற்போதித் தோரே
விந்தையார் மைத்தேர் கைப்பேர்
விண்டுவாச் சேவல் சேயே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| தந்தையார்சொல் | - | சிவன் பிரணவக் கேள்வி |
| ஊர் | - | செல்ல |
| சடகோணம் | - | உடலாகிய வீட்டில் |
| போதித்தல் | - | சொல்லுதல் |
| விண்டு | - | மலை |

(கருத்து)

மலைமேல் வாழுகின்ற சேவல் கொடியோனே! எந்தையாகிய நீ தைமாதம் பூசநாள் அன்று தேரிலே உலா வரும் காட்சி அடியார்க்கு இன்பத்தைத் தருகின்றது. இந்த உடலாகிய வீட்டில் தங்கள்

நெஞ்சிலே உன்னை வைத்த கற்றோர் நல்வாழ்வினை அடைந்தனர். உனது. தந்தையாகிய சிவபெருமான் கேட்ட பிரணவ மந்திரத்திற்குப் பொருள் பகர்ந்தவனே! உன் செயல்கள் எல்லாம் விந்தையைத் தருவதை எண்ணிப் பூரிக்கிறேன்.

இங்கு வரலாற்றுச் செய்திகள் (தைப் பூசம் மற்றும் பிரணவப் பொருள் உரைத்தல்) போன்ற நிகழ்ச்சிகளை ஆசிரியர் கூறுவது நோக்கத்தக்கது.

26. சேயன் கடப்ப மாலிகை
 சேரும் புயத்த யாபர
தூயன் கடக்கொ ணாதெதிர்
 சூரன் குலத்தை வேரறு
மாயன் கவிப்பு ராதனர்
 பாடும் பொருட்கெ லாமென
நேயன் கதிர்க்கை வெல்வனே
 மந்தனை உதைத்த காவலன்.

(சொற்குறிப்பு)

சேயன் - குழந்தை
கடப்ப - கடம்ப

மாலி - மாலையணிந்தவன்

தயாபர - கடவுள் அருளுடையவன்

கதி - அடைக்கலம்

நேயன் - நேசன்.

மந்தன் - எமன்

(கருத்து)

இயமனைக்காலால் உதைத்த உலகக் காவலனின் புதல்வனே! குழந்தை வடிவினான முருகன் தனது கழுத்திலே கடம்ப மாலையைக் கொண்டவன். வலிவான கைகளைக் கொண்ட புயங்களையுடைய அருளாளன். நல்லதன்மை பெறாது, இறையை நாடாது கெடுதலைச் செய்த சூரன் குலத்தை அடியோடு அழித்தவன். அறிவுசார் புலவோர் பாடுகின்ற கவிகளுக்கெல்லாம் பொருளாக அமைந்தவன் முருகன்.

முருகன் நட்பைப் போற்றுபவன் தீமை அழிய நிற்பவன் என்று தெரிந்தும் கெடுதலே செய்த சூரனைக் கொல்லுதல் அறத்துவழிப்பட்டது என்பது இங்கு காட்டப்படுவது அறியதக்கது.

27. காவதின் அடிக்க மந்தி

காய்பழம் விளைத்த காந்து

பூவதில் மதுக்க முந்தி

போல்வரும் மயில்சி லம்பர்

பாவதி லிசைப்பா கொண்ட

பாதகம கற்று கந்தா

தேவதில் மிகுந்த வென்றி

தெய்வ யிற்பு யங்கா.

(செற்குறிப்பு)

விளத்த - விலக்குதல்

மந்தி - வண்டு

காவம் - காட்டுத்தீ.

காந்து - ஒளிசெயல்.

(கருத்து)

தேவர்களுக்கெல்லாம் உயர்ந்த, மிகுந்த வெற்றியை உடைய திண்மையான புயங்களைக் கொண்ட தெய்வமே! கவைகளிலே இருக்கக்கூடிய, பழங்களைத் தரக்கூடிய ஒளிமிக்க பூவில் இருக்கும்

மதுவை வண்டு உண்டு திளைப்பது போன்று அடியார் திளைப்பர். மயில்மேல் இருப்பவனே! நல்லவர்களால் பாடல் கொண்ட நாயகனே! என்னுடைய தீய செயல்களை யெல்லாம் நீக்குவாயாக.

முருகனை வழிபடும் அடியார்கள் பெறும் இன்பத்தை மதுவை உண்டு திளைக்கும் வண்டுக்கு உவமைகாட்டும் அழகு மகிழத் தக்கதொன்றாம். அடியார் திளைப்பு உள்ளுரையாகக் காட்டப் படுகிறது.

28. புயங்கா மாவுரமு மஞ்சு
பொருந்துமால் வரையு மிஞ்சு
கயங்க மாகடலு மன்று
கலங்கவேல் கடவி வென்று
செயங்க மாதிரம் வணங்கு
செகண்டிமே லுலவு கந்தா
சுயங்க மாயருள சுரந்து
தொழும்பர பாலருள்வா வந்து.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| மாவுரம் | - | மிகுவலிமை |
| செகண்டி | - | சிகண்டி மலை |
| கடலி | - | செலுத்தி |
| கயங்கு | - | விலகுதல் |
| சுயம் | - | இயல்பாக |
| சுரந்து | - | நிறைந்து. |

(கருத்து)

சிகண்டி மலையிலே உலவுகின்ற கந்தா! இயல்பாகவே உன்னிடம் கொண்ட பற்றின் காரணமாக வணங்குகின்ற அடியார்களுக்கு வந்து நீ அருள் செய்வாய். வலிமையான பெரிய தோள்களையுடையவனே! அன்று பெருங்கடல்களும் விலகி வழிவிடுமாறும் மலையையும் கடந்து செல்லும் வண்ணம் வேலினை விட்டு வெற்றியைக் கொண்டவன் நீ.

இளையவன் எனினும் அவனது வேல் கடல், மலை முதலிய வற்றைக் கடந்து சென்று வெற்றியை ஈட்டியது எனும் செய்தியை ஆசிரியர் இங்கு

தெளிவுறக் காட்டுகிறார். அவன் வலிமை இங்கு சுட்டப்படுகிறது.

29. வந்திடும் கவன மாய்கை
 வாம்பொடு துலையு ஞான
முந்திடும் மவுன யோகம்
 முன்பா கதியு மாகுங்
கொந்திடு மனிதர் தேவர்
 கும்பிட வதிக வாழ்வு
தங்கிடுங் குமார சாமி
 தன்சிகி வரையை நாட.

(சொற்குறிப்பு)

கொந்து - பூங்கொத்து
துலை - நிரை
வம்பு - தீச்செயல்
கதி - விண்ணுலகு

(கருத்து)

சிகிமலையில் குடிகொண்டிருக்கும் வேலவனை நாடினால் கதி கிடைக்கும். வாழ்வில் வம்பாகிய துன்பத்தைத் தந்து நாளும் வாடச் செய்யும்

மாயையெல்லாம் ஓடிவிடும். மேலான ஞானம் கிடைக்கப்பெறுவர். ஞான நிலையுடன் அமைதி காத்திருப் போருக்கு மேன்மையான வீடுபேறு கிடைக்கும். மனிதர், தேவர் என்ற வேறுபாடு இன்றி யாவரும் பூவுடன் வணங்குவோர்களுக்கு அதிக வாழ்வைத் தந்திடுவான் குமரனாகிய வேலவன்.

புவியோரும், மேலோரும் கும்பிடும் தெய்வம் அவன் என்றும், தன்னை நாடியவர்களுக்குக் கெல்லாம் வேண்டுவது ஈவான் என்பதும் தெரியவருகிறதல்லவா?

30. நாடவு மறியே னெண்ணி
நானுன தடிதியார் தம்மில்
கூடவு மறியேன் நன்மை
கூறவு மறியே னுண்மை
பூடவு மறியேன் மண்ணு
பாதக மறவே பண்ணு
ஆடவு மயிலூர் திண்மை
யாரிரு புயனே உன்னை.

(சொற்குறிப்பு)

நாடு - சேர்தல்

பூடவும் - உட்படுதல்

திண்மை - வலிமை

(கருத்து)

ஆடுகின்ற மயிலை ஊர்தியாகக் கொண்ட திரண்ட தோள்களையுடையவனே! என்மனத்தில் உன்னை நினைந்து சேரவும் அறிகிலன். உன்புகழ்ப் பாடும் அடியார்கள் கூட்டத்தில் கூடவும் அறிகிலன். நலம் தரும் நன்மையான சொற்களைக் கூறவும் அறியேன். உண்மையாக இருக்கவும் அறியேன். ஆதலால் இம்மண்ணுலகில் கொடுஞ் செயல்களே செய்து வருகிறேன். நான் அக்கொடுஞ் செயல்களை இனி செய்யாது இருக்க அருள் புரிவாய்.

பிறவிப் பயன் நன்மை செய்வதே. மனிதன் அதனைச் செய்யாது கொடுஞ்செயல் புரியினும், விருப்பு வெறுபற்ற இறையை நாடினால் அவனருள் கிட்டும் என்பதை நாம் அறியலாம்.

31. உன்னை யும்புகழ்ந் தணுகு

என்றுணைப் பணிந்து ருகுவேன்

பின்னைப் புறஞ்ச மையராய்

பின்னக்க மொன்று மறியேன்

என்னைப் புகன்றிடு மையாய்

இன்றைக் கிசைந்தே ழுறைவாய்

பொன்னைப் புயங்கொள் முருகா

பொம்மலச் செகண்டி வரையாய்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| அணுகுதல் | - | சேருதல் |
| பொன் | - | பொலிவு |
| பின்னக்கம் | - | பிணக்கம் |
| புயம் | - | தோள் |
| பொம்மல் | - | பொலிவு |
| செகண்டி | - | குன்றக்குடி மலை |
| பொன் | - | ஒளி. |

(கருத்து)

பொலிவுமிக்க சேகண்டி மலையில் இருக்கும் பொன்னிறமான தோள்களைக் கொண்ட முருகா!

நான், உன்னைப் புழ்ந்துப் பாடி இறவா நிலை அடையவேண்டும் எனப் பணிந்து உருகுகிறேன். பிற சமயத்தார் போல் எனக்கு உன்னிடம் வருத்தம் ஒன்றும் இல்லை. எந்நிலைக் கண்டு இன்றைக்கே என்னை உனது அடிமையாக ஏற்றுக் கொள்வாய்.

பல்வேறு உவமைகளைக் கூறிய ஆசிரியர் இங்கு முருகனது தோள்பற்றி கூற வரும்போது பொன்னைக் காட்டுகிறார். பொன் நிறத்திலும், ஒளியிலும் தலையாயது என்பது நாமறிந்த ஒன்று. அவன் தோள் ஒளிமிக்கதாகவுள்ளது எனக் கூறுவது நோக்கத்தக்கது.

32. வரையா னைஞான வின்ப
வடிவா னைவானி லும்பர்
துறையா னையேக வர்ந்த
சுபவே ளைவேத னம்பு
முறையா னைமீறு வென்றி
யுடையா னைநீப லங்கல்
விரையா னையேவ ணங்க
வினைதீ ருநீடு துங்க.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| வரையான் | - | மலைமேல் வாழ்பவன் |
| உம்பர் | - | தேவர் |
| துரையான் | - | மேன்மகன் |
| வென்றி | - | வெற்றி |
| அலங்கல் | - | பூமாலை |
| நீபம் | - | கடம்பு |

(கருத்து)

மலைமேல் வாழ்கின்றவன். இன்பத்தைப் பயக்கக்கூடிய ஞான வடிவினனாக இருக்கின்றவன். வானில் வாழுகின்ற மேன்மக்களாகிய தேவர்களைக் கவர்ந்தவன். யானைமீது ஏறி நின்று வெற்றியைப் படைத்தவன். கழுத்திலே கடம்ப மாலையைக் கொண்டவன். வேகமாக வந்து அருள் தருபவன். அப்படிப் பட்ட உன்னை வணங்க, நீண்ட காலமாக என்னிடம் குடிகொண்டிருக்கும் தீயச் செயல்கள் எல்லாம் ஓடிவிடும்.

இப்பாடலில் முருகனது பல சிறப்புகள் கூறப்பட்டு, அவை நாடுவோர் எவ்வகைத் துனபத்தையும் நீக்கலாம் என்பதை ஆசிரியர் அழகுறக் காட்டுகிறார்.

33. துங்கமா மலையில் மேவு
 சுந்தர ரன்ன விசாகர்
சங்கமா கவிஞர் பாடு
 தந்தெலா முறைசெய் வாணர்
சிங்கமா யடுகு மாரர்
 சிந்தைகூ ருரிமை யோகர்
மிங்கமா வினையி ராது
 பஞ்சிலே கனலி யாக.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| துங்கம் | - | மேன்மை |
| விசாகன் | - | குமரன் |
| சங்கமர் | - | திருக்கூடடத்தார் |
| வாணன் | - | கார்த்திகையன் |
| கூர் | - | மிகுதி |
| இமை | - | மயில் |
| கனலி | - | நெருப்பு |

(கருத்து)

மேன்மை பொருந்திய மலையில் வாழ்கின்ற அழகிய குமரா! திருக் கூட்டத்தார் உன்னைப் பாடும்படி அவர்க்கு உரைசெய்த கார்த்திகேயா! போரிலே சிங்கம் போன்று போரிடுகின்ற குமரனை மிகுதியாக நினைவோரது சிந்தைதனில் இருக்கின்ற தீவினையானது நெருப்பின் கண்பட்ட பஞ்சுபோல் சாம்பல் ஆகும்.

பஞ்சானது நெருப்பின்கண் பட்டால் எப்படி அதன் வடிவம், நிறம், குணம் முதலிய அனைத்தும் நீங்கிவிடுமோ, அதுபோல் முருகனிடம் அடைந்த உயிர் தன் வினைகள் எல்லாம் களையும் எனும் உவமை நோக்கத்தக்கது. நெருப்பிற்கேற்பப் பஞ்சு மாறுவது போல் கயவர் மனமும் மாறுபடும் என்பது எண்ணி மகிழத்தக்கது.

34. யாகம் புரிந்துவளர்
கண்ட கன்புதல்வி
பாகம் புரிந்தகுக
பரன்சே கண்டியனே

நாகம் புகுந்துவினை

யாவும் பரிந்துசிவ

யோகம் புரிந்திடுவன்

ஓடும் பவங்களினி.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| **கண்டகன்** | - | அசுரனாகிய தக்கன் |
| **வளர்** | - | வளருதல் |
| **பவம்** | - | பாவம் |
| **நாகம்** | - | தேவலோகம், |
| **பரன்** | - | கடவுள் |

**(கருத்து)**

**வேள்வி செய்த அரக்கன், தட்சனின் புதல்வி அன்னை உமையாளிடம் தோன்றியவன். சேகண்டி யாகிய தோகை மலையின் கடவுள். நான் சிவம் பெற வேண்டும எனும் எண்ணம் மேலிட, தேவர் உலகம் கைலைமலையில் வாழுகின்ற முழுமுதற் தெய்வம் சிவனை வழிபாடு செய்து வருகிறேன். ஆதலால் இனி செல், நில் பிறவிகளில் செய்த தீவினையாகிய பாவங்கள் அனைத்தும் நில்லாமல் ஓடிவிடும்.**

அரக்கனின் புதல்வி எனினும் உமையை மனமுவந்து ஏற்றுக் கொண்டார் சிவன். விருப்பு வெறுப்பற்ற அவரின் கதியை அடைய வேண்டும் என்பதே அடியாரின் ஆவல் என்பது அறியத்தக்கது.

35. இனிமாதர் கருவினிடை
    இசையாம லுருவமது
கனிமாதர் கலவியிடை
    கலவாத கதியுதவு
பனிபாவ மரவிபரி
    படிதோகை மலையதனில்
நனியாரை பெறுபன்னிரு
    நயனாநின் னடிமை

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| இசையாமல் | - | பொருந்தாமல் |
| கலவி | - | புணர்தல் |
| கதி | - | பேரின்பம் |
| பனி | - | அச்சம் |
| நனி | - | பெருமை |
| நயனா | - | கண்ணா. |

(கருத்து)

மேன்மை பொருந்திய தோகைமலையில் இருக்கின்ற முருகன், பெருமைமிகு ஒளிபொருந்திய பன்னிரண்டு கண்களைக் கொண்டவன். நான் உனது அடிமை. நான் இனி பெண்களின் கருவில் தோன்றாது இருக்கவேண்டும். கனிவான தீ மொழி பேசும் பெண்களுடன் சேராமல் இருக்கவேண்டும். அச்சத்தைத் தரக்கூடிய பாவங்களில் இருந்து விடுபட வேண்டும். இப்படிபட்ட பேரின்பத்தை நீ தருவாயாக.

இவ்வுலக வாழ்வின் தன்மைக் காட்டி, அதனால் நாம் அடையும் துன்பத்தைக் காட்டிலும் மேன்மையானது விடுபேறு; அதுவே தனக்கு வேண்டும் என ஆசிரியர் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

36. அடுமை படைத்தனை
நலருளை யளித்திடுவை
கடுமை படைத்தவினை
களையு மகற்றிடுவை

தொடுமை படைத்தமுடி

தொகுமயில் வெற்பில்வளர்

நெடுமை படைத்தவயில்

நிருபளனைத் தெரிய.

(சொற்குறிப்பு)

உளை - தலை

நிருபன் - அரசன்

நெடுமை - நீண்ட

அயில் - கூர்மையானவேல்

(கருத்து)

நீண்டு வளர்ந்த முடிகளைக் கொண்ட தோகையினையுடைய மயிலையுடையவனும், மலையிலே வாழ்பவனும், கைகளில் நீண்ட கூர்மையான வேலினை உடையவனே! கடிய கொடிய வினைகளை நீக்கிடுவாய். என்னை உனது அடிமையாக ஏற்றுக்கொண்டு நலம் பல அளித்திடுவாய்.

அறிந்தோ, அறியாமலோ தீவினைகளைப் புரிந்த அடியார் அவற்றை கடிய இறையிடம் வேண்டுவதை நாம் இங்கு காணலாம்.

நீ அரிதானவன். அரிதானை உன்னைப் போற்றவும், எனது அறிவை நல்வழியில் செலுத்தவும் உன் காட்சியை நல்குவாய்.

அடியவர்க்கு இறைவன் காட்சி தந்து ஆட்கொள்வது சைவ சமய வரலாற்றில் நாம் காணக் கிடப்பது. அதனை இந்நூலாசிரியரும் இங்கு வலியுறுத்துகிறார்.

38. தேட்டுப் பணத்தைமனை
சேர்த்துப் புதைப்பரிடை
பாட்டுப் படிக்கிலிசை
பார்த்துக் கொடுப்பதில்லை
ஆட்டுப் படித்தமயில்
ஆட்சிச் சிலைக்குமர
வீட்டுப் பலத்தையருள்
வேட்கைச் செகத்தை விட.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| தேட்டு | - | பேராசை |
| வீட்டுப்பலம் | - | மோட்சம் |
| வேட்கை | - | ஆவல் |
| செகம் | - | உலகு |

(கருத்து)

அழகிய தோகைகளையுடைய ஆடிவரும் மயிலில் ஆட்சி புரியும் குமரனே! பேராசையின் காரணமாகப் பணத்தைத் தேடி மண்ணில் புதைப்பவர்களிடத்தில் இசையோடு கூடிய பாடலைப் பாடுவதில் பலன் கிடையாது. பூமியின் கண் வாழும் சிற்றின்ப வாழ்வே பெரிது எனும் ஆவலைப்போக்கி மேலான பேரின்ப நிலையை அருள்வாயாக.

ஆசிரியரின் தேட்டு, பாட்டு, ஆட்டு, வீட்டு என்ற சொற்களில் தோன்றும் அடிகள் பாடலின் ஓசை, பொருள் நயம் இவற்றை நமக்குத் தருவது நோக்கத்தக்கது. பேராசை மனிதரிடம் பாடுவது அல்ல; முருகனிடம் பாடுவதே பேறு என்பது தெரிகிறது.

39. விடவேணும் மாய்கையது

விழைவான வாழ்வதனை

நடவேணும் வேதமுடி

நடுஞா னமென்பர்

மிடவேணும் நீகண்டு

யெனைமோத நாடுமனை

யடவேணும் வாகைமயில்

சலாகு கரவலிய.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| வாகை | - | வெற்றி |
| சலாகு | - | ஈட்டி |
| அடு | - | கொல்லுதல் |
| வலிய | - | தானாக |
| மிடல் | - | வலிமை |
| மோதம் | - | விருப்பம் |

(கருத்து)

சண்டையில் வெற்றியைக் கொண்டவன். கையிலே வலிமையான ஈட்டியினையுடையவன். தோகையிலே (மலை) வலம் வரும் முருகன். காமம்,

பகை போன்ற மாயையான வாழ்விலே உழலும் விருப்பத்தை நான் விடவேண்டும். மாயையில் உழலும் என் எண்ணத்தைக் கொன்று, ஞானமாகிய பெருநிலை நான் அடையவேண்டும். அதற்கு எனக்கு வலிமை வேண்டும். என்னை விரும்பி என் உள்ளமாகிய இல்லம் வரவேண்டும்.

ஆசிரியர் தனக்குப் பொன், பொருள், துய்ப்பு (போகம்) இவற்றை வேண்டாது, ஞானத்தை வேண்டுவது அவரின் இறையுணர்ச்சியைக் காட்டுகிறது.

40. வலிய வந்தருதே
 மறமு மஞ்சாமலே
மெலிய வந்தவீடார்
 வெகுவரங் களீவாய்
நலிய வந்தசூரமா
 நடுநடுங் கவீறே
மலிய வந்தவேலா
 வளர்சே கண்டிமேரே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| ருது | - | பருவம் |
| வலிய | - | தானாக |
| வீடார் | - | வீடு |
| வரம் | - | மேன்மை |
| மலிவு | - | மிகுதி |
| மேரு | - | மலை |

(கருத்து)

சேகண்டி மலையில் இருக்கிற வேலா! மிகுதியாக வந்த அரக்கரை வென்று சூரன் அச்சமுற அவனுக்கு இறுதியினைத் தந்தவன் நீ. நலிவினைப் பெற்ற அடியவர் உய்யும் வண்ணம் அவருக்கு யாருக்கும் அஞ்சாமல் காலத்தே வந்து மென்மையும் மேன்மையும் தருவாயாக.

முருகனின் அருட் தன்மையையும், அவனின் எளிய தோற்றத்தையும் ஆசிரியர் அழகுறக் காட்டுவது நோக்கத்தக்கது.

41. மேரான தோகைமயி லாலை யத்தில்

மேலான தேவர்தொழ வாழ்வு பெற்ற

சீரான வேலரிரு தாளி லிச்சை

சேராவி ரோதவ நியாய லுத்தர்

காரான வுதிமட வார்ம யக்கு

காமர்வி காரமது மூழ்கி யச்ச

நேரா னஎம துயிரே பறிக்க

நீடுழிநா ளுமுடலே யெடுப்பர்.

(சொற்குறிப்பு)

மேரு - உட்காரும் இருக்கை; மலையுமாம்.

சார் - அழகு

கார் - இருண்ட

இச்சை - ஆசை

அலுத்தர் - வெறுத்தவர்

காமர் விகாரம்- பெண்ணாசை.

(கருத்து)

தோகையையுடைய மயிலை வாகனமாகக் கொண்டு அமர்ந்திருக்கும் முருகனை, மேலுலகத்தில் வாழுகின்ற தேவர்கள் வணங்கி வாழ்வு பெற்றனர்.

அழகிய வேலைக் கையிலே கொண்ட வேலவனின் இரு திருவடிகளின் மீது ஆசை கொள்ளாது, அவன் மீது பகையுணர்வுடன் வெறுப்புற்றவர்; இருள் சேர் கூந்தல் கொண்ட பெண்களின் காம மயக்கத்தில் சிக்கி உயிர் மாய்ந்து போக; மீண்டும் மீண்டும் பிறவி பெறுவர்.

இறைவனது திருவடியை நினையார் ஒருநாளும் பிறவியாகியக் கடலை நீந்தமுடியாது என்பதைக் காணும் போது வள்ளுவரின் "பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடிச் சேரர்தார்" எனும் குறள் நமக்கு நினைவில் வருவது நோக்கத்தக்கது.

42. எடுப்பதுன் திருகான் முடிமேல் நெஞ்ச
மிசைப்பதுன் உருவையறி வினிதா யன்பு
தொடுப்பதுன் திலகம் நன்குது தபப
துணதரு மையறி கதையெ முந்தி
யடுப்பதுன தடியவர்க ளுறவே மீண்டி
அகற்றுவ வினையையிது நிசமே வந்து

கொடுப்பதிர வலர்களுன் வனமே துன்று

குறத்தியின் முலைமருவு குகனே யென்றும்

(சொற்குறிப்பு)

இசைத்தல் - நினைத்தல்

திலகம் - பொட்டு

தொடுப்பது - அணிவது

துதித்தல் - வணங்குதல்

இரவலர் - வேண்டுபவர்

(கருத்து)

அடர்ந்த தினைப்புகைக் காட்டிலே வள்ளியைச் சேருகின்ற முருகா! உனது காலடியை எனது முடிமேல் எடுப்பேன். எனது நெஞ்சம் எப்போதும் உனதுருவையே நினைக்கும். அன்பு மேலிட விரும்பி அணிவது உனது திலகம். நான் வேண்டித் துதிப்பது அருமையாகிய கதை பொதி பாடலையே. வினையிலே வாழும் உனது அடியவர்களாகிய இரவலர்களின் வினையை விரைவில் வந்து அகற்றுவாயாக.

தன்னை இறைஞ்சு வேண்டும் அடியார்க்கு ஓடோடி வந்து அருள்பாவிப்பவன் முருகன் என்பது நமக்கு நன்குத் தெரிகிறதன்றோ? மெய், வாய் அனைத்தும் அவனையே போற்றுதலைக் காண்கிறோம்.

46. என்றுமைந்து குன்றிமீதி லேறி யாடு
இந்திரியங்க ளோடுகூடி மாய மாக
ஒன்றுமனந்த மனமாசு தீர ஞான
மொன்றறிந்து சிவயோக சார நாடி
நின்றுமுந்த னிருபாத சேவை சேர
நெஞ்சுகந்து புரியீறி லாத வீடு
வென்றுமஞ்சு படிதோகை மேரில் மேவு
திண்புயங்க முருகேச னேயிவ் வேளை.

(சொற்குறிப்பு)

| | |
|---|---|
| மனமாசு | - மனக்குற்றம் |
| சாரம் | - சத்து |
| ஈறில்லாத வீடு | - பேரின்பம் |
| மஞ்சு | - மேகம் |
| திண் | - திரண்ட |
| இந்திரியங்கள் | - பொறிகள் |

(கருத்து)

திரண்ட தோள்களைக் கொண்டவனும் மேகத்தினூடே செல்லும் வல்லமை படைத்த மயில் மீதிலே வரும் முருகனே! உடலை எரிக்கும் உலகாசைகளுடன் கூடிய மாயமான வாழ்வு எனும் மனக் குற்றத்தைப் போக்க, 'சிவம்' எனும் ஞானத்தை அறிய உன் திருவடிகளுக்குச் சேவை செய்வேன். நீ மனமுவந்து முடிவில்லாத பேரின்பத்தை நல்குவாயாக.

மனம் குற்ற வயப்பட்டது. அதனை நீக்கும் வல்லமை முருகனிடம் சேர்வோர்க்குக் கிட்டும் என்று ஆசிரியர் கூறுவது நோக்கத்தக்கது.

44. வேளைமுனி யீசரன்பு கூர முன்பு
 வேதநடு வாதியந்த மேபு ரிந்த
தாளைமுனி வோர் வருந்த மோக வந்த
 கார்மதவைப் பிடுங்கும் யானை கங்குல்
நாளைமுனி சேவலங்கை யாழி யும்பர்
 நாடுமயில் மேரிலென்று மேவு கந்தா
தாளைமுனி யாததொண்டர் வேறு கண்ட
 சாமிகளை யேவிரும்பி லார்நி னைந்து.

(சொற்குறிப்பு)

முனிவோர் - தவத்தோர்

கங்குல் - இருள்

முனியாத - வெறுக்காத

ஆழி - சக்கரம்

மேவு - ஆசை

(கருத்து)

உன் திருவடிகளை வெறுக்காத அடியார் வேறு தெய்வங்களைச் சிந்தையிலும் நினைந்து விரும்ப மாட்டார்கள். அருந்தவத்தோர் அன்புடன் விளங்க அவர்களுக்கு வேதத்தின் பொருளை உணர்த்தியவன். உன்னை வெறுப்பவர்கள் வருந்தவும், அவர்களை ஏற்று அவர்களுக்குள் படிந்துள்ள இருளை அகற்றி; அறிவு புகட்டியவன். வலதுகையில் சக்கரத்தையும், வில்லையும் கொண்ட திருமால் உன்னை நாடவும், மலையிலே மயில் மீதில் வரும் முருகா வணக்கம்.

காக்கும் கடவுள் திருமால் இளையவன் குமரனின் நட்பை நாடுவது அறியத்தக்கது. பகைவரையும் பாசத்துடன் அணைக்கலாம் என்ற பண்பு போற்றக் தக்கது

45. நினைந்துநிதி கவர்ந்துபணி கொணர்ந்து வீடு
நிறைந்தசுக மடந்தையொளி நிரம்பு மேனி
புனைந்துமன மகிழ்திறவு கலந்து காதல்
பொருந்துவர்கள் தவஞ்சிலது புரிந்தி டார்கள்
வனைந்துனது பதங்கள்தனை வணங்கிடார்கள்
வருஞ்சமனை யடர்ந்துலகில் வளர்ந்திடார்கள்
நனைந்துமது சுகமேபெரி யசெகண்டி மேரில்
நலம்பெருகு கடம்பவினை நலிந்து வீறு.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| நிதிகவர்ந்து | - | பொருள்பெற்று |
| கொணர்ந்து | - | கொண்டுவந்து |
| புனைந்து | - | ஒப்பனை செய்து |
| திறவு | - | உறவு |

வனைந்து - அலங்கரித்தல்

சமனை - காலன்

வீறு - பெருமை

(கருத்து)

பொருள் பெறவேண்டும் என்று நினைவு பெற்று அதனைப் பெற்றும், ஒளி பொருந்திய கண்களைக் கொண்ட நலம் பெற்ற பெண்களிடம்; அச்செல்வத்தைக் கொண்டு வந்து வீடு நிறைவு பெறச் செய்யும் மனிதர்கள், அப்பெண்களின் உடலைக் காதல் செய்து இரவிலே கலந்து இன்புறுவர். தருமமோ, தவமோ செய்திட மாட்டார்கள். அவன் திருவடிகளைப்பணிந்து வணங்கிட மாட்டார்கள். சிற்றின்பமே பெரிது என இருப்பர். இயமனின் கோரப் பிடியில் சிக்கி உடல் அழிவர். வினையினால் நலியும் அவர்களுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் நலம்பல அருள்வாயாக.

பெண்கள் பால் சிக்குண்ட மனிதர் வேறு நன்மை பயக்கின்ற வேலையைச் செய்யமாட்டார் என்று குறித்தமை காண்க.

46. வீறான வாணவத்தை நம்பி மாதர்

மேலாசை பூணவிட்டு வம்பி ராண

நீரான நோய்பிடிக்க வெம்பு வீர்கள்

ஈடேறு மாறிருக்குந் தொன்று கேளும்

ஆறான மாமுகக் குழந்தை வேலர்

ஆதார மாமுமைக்கு மாந்தர் பாலா

பேறான தோகைவெற்பில் வந்த சாமி

பேரோதி யேசெபித் திருந்து பாரும்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| ஆணவம் | - | செருக்கு |
| பூண | - | கொள்ள |
| வெம்புதல் | - | வருந்துதல் |
| பேறு | - | வரம் |
| வெற்பு | - | மலை |

(கருத்து)

ஆணமாகிய மாயையை நம்பி, பெண்களிடம் ஆசை கொண்டு வலுவான உடம்பிலே, இறுதியைப் பயக்கக் கூடிய நோய்கள் பற்ற வருந்தும் உயிர்காள்! நீங்கள் அந்நோயிலிருந்து விடுபட வழி ஒன்று

இருக்கின்றது கேளுங்கள். ஆறுமுகங்களை யுடைய குழந்தை வடிவம் கொண்ட வேலவனை, உமையாளின் பாலனை ஆதாரமாகக் கொள்ளவும். தோகைகளைக் கொண்ட மயிலின் மேல் வரும் குமரனை நாளும் வாயால் ஓதி அவ்வாய்ப்பினைப் பெறுவீராக!

பெண்கள் பால் ஆசைக் கொண்டு வீண் நோய்களை விரும்பி விலை கொடுத்து வாங்கும் மனிதர் பண்பை இடித்துக் கூறுகிறார் ஆசிரியர். இறை நாட்டமே இவற்றை நீக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

47. பாரில்வளம் பெருகுமயில் வெற்பு வாசா
பால்மதியம் புனைசடிலர் பெற்ற பாலா
போரில்வருந் தக்கனுயிர் அற்ற வேலா
பூவடிகண் டகமுற மதித்த யோகா
மேரில்வளம் பெறுமிரு தனத்து மாதா
மேவுசு கங்கொடு வுயிர்க்கு வாழ்வும்
ஊரில் வளம் பலிவரி காட்சி யாவு
மோர்படியென் றறிவினை விளக்கு வார்கள்.

(சொற்குறிப்பு)

சடிலர் - சிவன்

தக்கன் - ஓர் அரக்கன்

இருதளத்து - இருபக்கம்

மேவு - விரும்பும்

பலி - பூசை

(கருத்து)

உலகை வளம் பெருக்கும் மலைமேல் வாழும் மயில் வாகனன்; அழகான நிலவை சடையிலே கொண்ட சிவன் பெற்ற பாலன்; போரிட்ட அரக்கன் தக்கனை வெற்றிக் கொண்ட வேலவன்; மலர் போன்றத் திருவடிகள் கண்டு அகமகிழ்ச்சி யடையும்படி மதிக்கத்தக்க யோகனே! வலப்பக்கம், இடப்பக்கம் என தெய்வானை, வள்ளி எனும் இரு பெண்களைக் கொண்டவனே! உயிர்கள் விரும்பும் இன்பங்களைக் கொடுத்து வாழ்வை வளரச் செய்ய ஊரில் பூசைகள் இயற்றுதல் ஓர் வழியென்று அறிந்தோர் அறிவினை துலங்கச் செய்வார்கள்.

இப்பாடலில் ஆசிரியர் தரும் பாரில், போரில் மேரில், ஊரில் முதலிய சொற்கள் பாடலின் ஓசையைக் கூட்டி இனிமையாக இருப்பது நோக்கத்தக்கது. இறைவனை உவகை படுத்த பூசைகள் செய்வது மரபு.

48. விளக்கிடுவர் பாத்திறவை யிகத்து வாழ்வை
வெறுத்திடுவர் உனைப்பணிய விருப்ப மாக
இளக்கிடுவர் மனத்தையவ மதித்து மோது
மேம்பகையு மறுத்திடுவ ருனைப்ப ராவி
முளக்கிடுவர் வாக்குநிக ருரைப்ப தாரை
முடிச்சிகியின் வரைக்கினிய முறைகு காமுன்
விளக்கிடுவல் வினைச்சமனை யடர்த்த வாமை
மலர்க்கணவன் சரச்சிறுமி மதித்த வர்மெய்!

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| இளக்கிடு | - | தளரச்செய் |
| பதர் | - | அற்பம் |
| முளக்கு | - | முழக்கு |
| சமன் | - | நமன். |

(கருத்து)

உயர்ந்த சிகிமலையில் வாழும் குகா! உன்னை வணங்கும் தன்மையால் இவ்வாழ்வில் ஞானமாகிய அறிவை விளக்குவர். இவ்வுலக வாழ்வை வெறுப்பர். தம்மை அவமதிக்கும் பகைவர் சொல்லைப் பொருட்டாக எடுக்காது அவர்களை மன்னிக்கும்படி மனதைத் தளரச் செய்வர். பகை கொள்ளார். அறிவிலான் கூறும் வீண் சொற்கள் தழுவுதலைத் தவிர்ப்பர். சிறுமி குற வள்ளிக்குக் கணவனே! நீ அவர்களுக்கு வினையால் வரும் இடரை நீக்கிடுவாய்.

அல்லலுறும் மனிதன் அதிலிருந்து விடுபட ஒரே வழி முருகனை வணங்குதலே என்பது அறியத்தக்கது. அவனை வணங்குதலால் பகைவன் சொல்லை பெரிதுபடுத்தாத உயர்வு நிலை கிடைக்கிறது.

49. மதித்தவர் செனனமயக்க மார்ம னத்தை

வேரோடு களைய யிகத்து வாழ்வு

பதித்தவாச னையொளிய விளக்கு ஞான

பரத்தைநானெ னவறிய யெனக்கு நீசெய்

கதித்தவர்சி றையைய கற்றி மீறு

கருத்தனேசு ருதியினி ருக்க வேவல்

விதித்தவர்ம யிலின்வரை யிடத்தில் மேவு

விரைக்குகா மனையினிடை கணக்கி லாமல்.

(சொற்குறிப்பு )

| | | |
|---|---|---|
| இகம் | - | இவ்வுலகம் |
| பரம் | - | மேலுலகம் |
| பரத்தை | - | பரம்பொருளை |
| வெறி | - | கலக்கம் |
| கதித்தல் | - | மிகுதி |
| விரை | - | நறும்புகை |

(கருத்து)

மயில்கள் உறையும், நறும்புகை மிக்க மலையிடத்தில் இருக்கும் குமரனைக் கணக்கு இல்லாமல் மனம் எனும் மனையின் கண் நாடுவீர். பிறவி மயக்கத்தில் மூழ்கியுள்ள என் மனம், இவ்வுலகத்து வாழ்வில் நிலைபெறுகின்றது.

அதனை வேரோடு களைந்து ஞானமாகிய பேரின்ப வாழ்வு எனக்குக் கிடைக்குமாறு அறியச் செய். இம்மாய வாழ்வெனும் சிறையிலிருந்து என்னை அகற்றி மேலான நன்மையைச் செய்வாயாக.

இறைவனை வணங்குவதில் எவ்விதக் கணக்கும் இருக்கக் கூடாது. கணக்கில்லாமல் வணங்குபவர்களுக்கு மேன்மையான வீடு பேற்றினைத் தருவான் என அறிக.

50. கணக்கிலைநா னெடுத்தவுட லுனைப்ப ராவு
கருத்திலைநூ னெறித்தவசு தொடுத்த வாசை
பிணக்கிலைநா னுனக்கடுமை யினித்தா ளாமல்
விணைப்பதமே கொடுத்தறிவை யெழுப்பி யாளும்
வனக்கிலைவே லெடுத்த மரர்து திக்க வாகை
மயில்சிலைமே லிருக்குமொரு துரைக்கு காசொல்
தனக்கிலைமே யகுடிற்குறவர் மகட்கு மாலை
தரித்தபுயா சலக்குமரா நிலத்து மீது.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| வசு | - | செல்வம் |
| பிணக்கு | - | சண்டை |
| வாகை | - | வெற்றி |
| துரை | - | குமரன் |
| தரித்த | - | அணிந்த |

(கருத்து)

நிலத்திலே குறவர் மகளுக்கு மாலை சூட்டிய கைகளைக் கொண்ட புயங்களையுடைய குமரனே! தேவர்கள் வணங்கும்படி வேல்கொண்டு வெற்றி சூடியவனும் மயில் மேல் இருப்பவனுமான குமரனே! நான் பல பிறவிகள் எடுத்துவிட்டேன். அப்படி யெடுத்தும் உன்னைப் பார்க்கும் கருத்து இதுவரை எனக்கில்லை. நான் இனி உன்னைக் காணத் தவம் மேற்கொள்ள ஆசைப்படுகிறேன். உனக்கு நான் இனி அடிமை. உன் பாதமலர் காட்டி என் அறிவு துலங்கும்படி ஆட்கொள்வாய்.

தேவர்கள் வணங்கும்படியான குமரன் அடியவர்கட்குத் துணையாக இருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் காட்டும் பாங்கு நோக்கத்தக்கது.

51. நிலத்தி லேஎம்மை மயக்கி லேவினை
நெருக்கு தேமின் எறிதேரா
புலத்தி லேஉன(து) இணைத்த தாளினை
பொறுத்து நானுய வருடாராய்
செலுத்தி லேமக வுருக்கொ டேயுமை
திருக்கை மேல்வளர் சிறுபாலா
குலத்தி லேபுயா குறப்பெண் ழெழில்
குறித்து மேவழி செய்வேளே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| மயக்கி | - | மயக்குதல் |
| வினை | - | ஊழ் |
| தாள் | - | திருவடி |
| செலத்திலே | - | நீரிலே |
| புயா | - | தோளா |
| குலம் | - | இனம் |

(கருத்து)

சண்முகமாம் பொய்கையில் குழந்தையுருக் கொண்டு உமையாகிய அன்னை பார்வதியின்

கைகளிலே வளர்ந்த சிறுவனே! வேடர் குலத்தில் தோன்றிய குறப்பெண் வள்ளியின் அழகிலே மயங்கி அவளை மனைவியாகக் கொண்ட குகனே! நெருக்கும் வினையின் வலிமையால், பூமியில் மயக்கமுறச் செய்து பிற சமயத்தின்பால் ஈடுபாடு கொண்ட என்னை அந்நிலையிலிருந்து நீங்கச் செய்து, நான் உய்யும் பொருட்டு நினது திருவடிகளைக் காட்டி அருள்புரிவாய்! பிற சமயத்தில் தோய்ந்தவரும் முருகனின் பெருமை கண்டு தன்னை ஆட்கொள்ள வேண்டுவது கருதற்பாலது.

52. செயவே னுந்தயவதி னாலை யம்பொறி
 செறிமோ கந்தனை யறிவூணி
 எயவே ணும்பர் கதியோ கந்தனி
 லினிநா னின்றிட வருமாரி
 பெயவே ணுந்தனி மயிலா குஞ்சிலை
 பிரியா விங்கித முருகேச
 உயவே ணுந்தவ மிசைமா குஞ்சரி
 யொருபா கந்திகழ் குருசாமி.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| செறிமோ | - | நிறைதல் |
| அறிவூணி | - | அறிவுபயின்று |
| மாரி | - | மழை |
| இங்கிதம் | - | இனிமை |
| குஞ்சரி | - | பெண்யானை. |

(கருத்து)

யானைமுகக் கடவுள் விநாயகனின் மனதிலே இடம் கொண்ட வேலா! என்னிடம் அன்புகாட்ட வேண்டும். நிலைகெட்டு விளங்கும் கண், செவி, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐம்புலன்களும் உன்னை அணுக வேண்டும். தேவர்கள் பெற்ற பேறு பெறவேண்டும். கந்தனை அறிகின்றபடி அருள்மாரி பொழியவேண்டும். உன்னைப் பிரியாத மனம் வேண்டும். உன்னைச் சேரும் பொருட்டு மிக்க தவம் ஆற்றுவேன்.

முருகனின் அருள் உள்ளத்தை இங்கு கைம்மாறு கருதா மாரியுடன் ஒப்பிட்டுக் காட்டுவது நோக்கத்தக்கது.

53. குருசா மியவனை வெருவி

குறிசா மியை மயில்மேல்

வருசா மியைநீ யமர்புரி

வளர்சா மியை வரைமேல்

பொருசா மியைமறை நாவலர்

புகழ்சா மியை யானார்

தருசா மியைநினை யாருயிர்

தரியார் வினை பரியார்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| குருசாமி | - | தலைவன் |
| செருவி | - | அஞ்சி |
| வரை | - | மலை |
| அமர் | - | சண்டை |
| மறைநாவலர் | - | ஓதுவார் |
| தரியார் | - | நிலையற்ற தன்மை. |

(கருத்து)

தலைவனாக இருப்பவனும், வேட்டுவக்குல மங்கை வள்ளியை மணந்து குறிப்பிடும்படி யிருப்பவனும், மயில் ஊர்தி உடையவனும்,

போரிலே வல்லவனும், வளரும் தன்மை கொண்டவனும், மலைமேல் இருப்பவனும், மறை வல்லவர்களால் புகழப்படுபவனும் பிரணவ மந்திரத்தைச் சொன்னவனுமான முருகனின் அடியை நினையாத உயிர்கள் தங்கள் பிறவி வினையிலிருந்து விடுபட மாட்டா.

மும்மூர்த்திகளில் ஒருவன் பிரமன். படைப்புக் கடவுள் எனப் பேசப்படும் அவனுக்கே பாடம் புகட்டியவன் என்பதால் தலைவன் குருசாமி ஆகிறான். குறிசொல்லும் குலத்தில் பிறந்த வள்ளியை மணந்ததால் குறிசாமியாகிறான்.

54. பரியானையினி தமர்நிதி
  படைபூணணி கலமே
விரியார்கலி வளைதாரணி
  மிகவாமுவரி சையாய்
வரியார்சத தளமாமலர்
  மடமாநிறை சிகிமா
கிரியாலைய வடிவேலவா
  கிருபாலய முடையார்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| பூணணி | - | அணிகலன்கள் |
| தாரணி | - | உலகம் |
| சிகிமா | - | மலை |
| வரியார் | - | சந்நியாசி |
| கிரி | - | மலை |
| கிருபா | - | கருணையாளி |
| தளம் | - | பூவிதழ் |

(கருத்து)

நீதியை நிலைநாட்டக் குதிரை, யானை முதலிய படைகளை அணிகலன்களாகக் கொண்டவன். விரிந்து பரந்து ஒலி எழுப்புகின்ற கடலினையுடைய உலகில் பற்றற்றவர்கள் எப்போதும் உன்னை நிறைந்து சூழ்ந்திருப்பர். சிகி எனும் பெரும் மலையில் வசிப்பவன் வடிவேலன். அவனது கருணையால் நலம்பல பெறுவர்.

விரிந்து பரந்த உலகில் முருகனின் கருணையை நாம் அடையின், எல்லா வளமும் பெற்றவர்களாவோம் என்பதை ஆசிரியர் காட்டுவது அறியத்தக்கது.

55. உடையா யிடுமென மிகவே துதிசேர்

அளியுடனே பலிகவா தொழில் மாற

குடையா யிகபர மிருபா லிறநனி

குறையா வகைய ருள்தா வெனும்

கடையா யிருவி னைசுமை யாயற

நெறிகரு தானோர் திடமக லாத

னடயா யிகல யில்கயி லெயமை

குருபர னேமயில் வரையா செம்பொன்.

(சொற்குறிப்பு)

இகபரம் - பூலோக, பரலோக அனுபவம்

நனி - நெருக்கம்

சுமை - பாரம்

திடம் - உறுதி

அளி - அன்பு, குளிர்ச்சி.

(கருத்து)

குருபரனே! அருள் வழங்கும் பேரருளாக நின்று பெருமை சேர்ப்பவன் முருகன். இருவேறு உலகத்தும் குறை நீக்கும் குன்றக் கடவுள், நின்னை அழைத்தவர்க்குச் சுமைநீக்கும் பெருமைக்

குரியவன். நெறியினின்று பிறழாத வாழ்வை எனக்குக் கொடு.

மனித மனம் சிற்றின்பத்தில் ஈடு கொண்டு தீயனபுரிதல் இயற்கை. இதனை நீக்க ஆசிரியர் வேண்டுதலைக் காணலாம்.

56. அரசவனம் செறிநியம அமைபதி
 அதனிலுறும் சிகிவரை வேளே
பிரசவனம் கரைமருவி நறும்பணை
 பெருகியெழுந் திடுநதி யானே!
பரசவனம் தொடுதிகிரி கதைபயில்
 பவனண்டர் சொல்முடி வேளே
சிரசவனம் நகுசெய்க கதிவருமுன்
 தரிசனைகண் டவரிடை தானே!

(சொற்குறிப்பு)

சிகிவரை - சிகண்டிமலை

(கருத்து)

சிகிமலையில் வீற்றிருக்கும் முருகனே! மலைவாழும் வண்டுகள் பூக்களில் அமர்ந்திருக்கப்

பெருமை கொண்ட வேலனே! கதிரவன் போல ஒளியுமிழும் உன்னைப் போற்றி வணங்குகிறேன்.

57. தானே யறநெறி தேட னுனதடி
சாரே னிறைதமி னெறிதேரேன்
மீனே யனையக ணார்தோ ளணைசுக
மீதே மனமது குடியாயே
நானே யலைகுவ னாவார் சனனமு
நாடா வகையருள் புரிவாயே
தேனே யலையெறி யாறாய் அருவிசெய்
சேனார் மயில்மலை வடிவேலா!

(சொற்குறிப்பு)

சாரேன் - நாடேன்

சனனம் - பிறப்பு

(கருத்து)

இனிமையானவனே! ஆறுபோல் அருவிகள் பாயும் மயில்களையுடைய மலையின் அதிபன் வடிவேலனே! அறநெறியை நானும் தேடி நாட மாட்டேன். உனது திருவடியைச் சார்ந்திருக்க

மாட்டேன். இறைவனை அறியும் அறிவிலும் எனக்குத் தெளிவில்லை. மீன் போன்ற கண்களைக் கொண்ட பெண்களிடம் பெறும் சுகமே உண்மையானது என எண்ணி மனம் அதிலே நிலைத்து நிற்கிறது. நான் அதற்காக அலைகின்றேன். அதனை நாடாது இருக்க வேண்டும். அதற்கு நீ அருள்புரிய வேண்டும்.

இப்பாடலில் பெண்களின் கண்களுக்கு ஆசிரியர் மீனை உவமையாக்குவது நோக்கத்தக்கது. உலக இன்பம் நிலையற்றது என்று கூறப்படுகிறது.

58. வேலால் ஆக்கர்குல வேரறுத் தமரர்
மேலா யிருக்கஅரு ளியசாமி
மாலால் மற்சிறுமி தாளே வணக்கமிடு
மாமோ கலட்சனி மணவாளர்
சூலா இருட்புயல் விடாதே வளர்த்துமுடி
சூழ்தோகை வெற்பிலுறை குருசாமி
காலால் மலர்ப்பிரம னர்சீ முத்தைமுடி
காணா தகற்றினன் அறிவுமீற.

(சொற்குறிப்பு)

ஆக்கர் குலம் - அரக்கர்குடி

லட்சனி - அழகன்

வெற்பு - மலை

மற்சிறுமி - வள்ளி

(கருத்து)

கைகளிலே கொண்ட கூரிய வேலால் அரக்கர் குலம் அழியச் செய்தவன். தேவர்கள் மேன்மையான வாழ்வு வாழ வழி செய்தவன். திருமாலின் மருகன். மிகுந்த அழகுவாய்ந்த தாள்களையுடையவன். மற்சிறுமி வள்ளியின் மணவாளன். மயில்கள் உறைகின்ற மலையில் வாழும் சாமிகளுக்கெல்லாம் சாமி. பிரமன் கொண்ட அகந்தையைத் தன்னுடைய அறிவினால் அகற்றியவன் வேலவன். அரக்கர் அழிதல், தேவர்கள் வாழ்வு பெறுதல், படைப்பு கடவுள் பிரமனின் அகந்தை அழிதல் போன்ற கருத்துகளை இப்பாடல் வழி நாம் அறியலாம்.

59. மீறக் கதிதரு தோகைப் புரிமிசை

வேலைக் கதிரென வருசேயா

ஆரக் காவுரு வாய்நிட் களப

மாய்நித் தியமென வளர்வேலா

சீரக் கடுக நாவைப் புனைமக

தேவர்க் கருளுரை குருநாதா

கூறக் கதைசெய் நேமப் பதியெனு

கூலத் தொடுமுறை புரிவாசா.

(சொற்குறிப்பு)

தோகைப்புரி - தோகைமலை

(கருத்து)

மாலையணிந்த அழகனே! நீரிலே உருகொண்டு யானை மீது வருபவனே! ஒளி பொருந்திய வேலினைக் கையில் கொண்டு விரைவாக மயில் மீது வரும் முருகா! என்னைத் துன்பத்திலிருந்து விடுபடச் செய். அழிவில்லாது நாளும் வளரும் தன்மைக் கொண்டவன் நீ. தேவர்களுக்கு அருளுரை தந்த தலைவன். முறையான படையணிகளுடன் ஆட்சிபுரிகின்ற கோட்டையைக் கொண்டவன் நீ!

பாடல் முழுதும் அவனின் அழகு, ஆற்றல், முதலியவை பேசப்படுதல் அறியத்தக்கது.

60. வாசஞ் செறிதன மாவஞ் சியரிட
மால்கொண் டலையினும் நிதிதேடி
பாசஞ் செறிமனையூடன் பொடுபுதை
பாழுந் தொழிலிடை திரிபோது
நேசஞ் செறியறி வாலுந் தனைமன
நேயங் கொடுபணி குவனாளும்
தேசஞ் செறியடி யார்நம் பியவர்
சேதன சிகிமலை முருகேசா.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| செறிதனம் | - | செறிந்த பொருள் (தனம்) |
| வஞ்சியர் | - | மகளிர் |
| நேசம் | - | அன்பு |
| நேயம் | - | அன்பு |
| தேசம் | - | நாடு |
| சேதன | - | அறிவு |

(கருத்து)

நிறைதனமுள்ள, மணங்கொண்ட பெண்களிடம் ஆசை கொண்டு அலைந்தாலும், பொருள்தேடி பாசம்மிக்க குடும்பத்தில் உழன்று திரிந்தாலும், உன்னிடம் கொண்ட நிறைந்த அன்பினால், அறிவால் மனமானது உன்னைப் பற்றுக் கொண்டு பணிகிறது. நாட்டில் நிறைந்த அடியார்கள் மற்றும் நம்பியவர்களைக் காக்கும் அறிவானவன், சிகிமலையில் இருக்கின்ற முருகையன்.

வாசம், பாசம், நேசம், தேசம் போன்ற சொற்களைப் பெய்து அடியார் மனத்தையும், முருகனின் அருளையும் ஆசிரியர் தெற்றென விளக்குவதைக் காணலாம்.

61. கேசவன் கமல வேதியன் இரண
கேதுவுஞ் சசியும் பணியீசன்
வாசவன் சகல தேவரும் பரவ
மாவுரங் கிழிய அயிலேறி
நேசவன் சிகியும் வாணியுங் கவரு
நேமையம் பதியில் வளர்சேயா

பேசவன் புருகு நாமமொன் றுணர்வர்
பேரறந் தந்தவர் தவமோனர்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| கேசவன் | - | விஷ்ணு |
| கமல வேதியன் | - | இலக்குமிநாயகன் |
| சசி | - | சந்திரன் |
| வாசவன் | - | இந்திரன். |
| உரங்கிழிய | - | வலிஒழிய |
| வாணி | - | சரசுவதி |

(கருத்து)

அரக்கனின் வலிமையைத் தன் வேலால் ஒழித்த முருகனைத், தாமரையில் உறையும் இலக்குமியின் கணவன் திருமால், துன்பத்தைத் தரக்கூடிய கிரகனான கேது, கழுத்தில் மணியணிந்த ஈசன், இந்திரன் மற்றும் பல தேவர்கள் போற்றுவர். அன்பானவன், சொல்லால் ஈர்க்கும் தன்மை கொண்டவன். அப்படிப்பட்ட, நேமையம் பதியில் வளர்கின்றவனாகிய முருகனின் பெயரை நாளும் கூறும் அடியார் மேலான வீடு பேற்றைப் பெறுவர்.

வீடு பேற்றினை அடையும் வழியை இப்பாடல் விளக்குகிறது. மேலும் சிவன் போன்ற பெருந் தெய்வங்கள் "பாராட்டுதல்", அவனது பெருமை மேலும் உயர்வு பெறுகிறது.

62. மோனமா மறிவில் மாயமா யணுகி
   மோதுமாழ் வினையை யறவென்று
ஞானமா மொளியை நாளும்நா னறிய
   நாடிநீ கருணை புரிவந்து
மானமா வுலவு வேதனார் சிறையில்
   வாடவே முனிவு புரிகின்
தானமா வுசித வேலவா நியமை
   சாருமா மயிலின் வரைநம்ப.

(சொற்குறிப்பு)

| | |
|---|---|
| மோனமாமறிவு | - மௌனம் |
| மானமாவுலவு | - கவரிமா உலவுகின்ற |
| வேதன் | - பிரமன் |
| முனிவு | - கோபம் |
| உசிதம் | - மேன்மை |
| நியமை | - நியமம் எனும் செட்டிநாட்டு ஊர். |

(கருத்து)

அறிவில் ஒழியில்லாது மௌனமாக ஆழ்ந்து கிடக்கும், அலைமோதும் மாய வினைகளை அகற்றி நாள்தோறும் ஞானத்தை நீ எனக்கு அன்பு கூர்ந்து காட்டுவாய். கவரிமானை ஒத்துப் பிரமனிடம் கோபம் கொண்டு அவனைச் சிறையில் வாடச் செய்தவனே! நீ கொடையாளன், அழகியவன்! மலையின் மீது வாழ்கின்ற உன்னைத் தூய்மையான மனத்துடன் நம்புவோர் நலம் பல பெறுவர். தவறைக் கடிபவனாயினும் அன்பரிடம் மிகப் பரிவுடையவன் என்பது அறியத்தக்கது.

63. நம்பிய வடியேன் நெஞ்சக மதிலேறி
நந்திரு வினையே விளைவிக்கும்
வெம்பிய மனமே குன்றுக வறிவே
மிஞ்சிக வுனையே பணிபத்தி
பம்பிய தோளிலே தந்தருள் புரிவாய்
பங்கய சரணா மயில்வெற்பில்
கும்பியல் கொலுவே துன்றிய குமரா
குஞ்சரி கணவா நிலைநிற்க.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| வெம்பிய | - | கலங்கிய |
| குன்றுக | - | குறைதல் |
| மிஞ்சிக | - | கூடுதல் |
| பம்பிய | - | பொலிந்த |
| பங்கயம் | - | தாமரை |
| துன்றிய | - | நிறைந்த |

(கருத்து)

உன்னை நம்பும் அடியேன் நெஞ்சில் நல்வினைகளாற்றி நல்லறிவு மிகச் செய்வாய். கலங்கிய மனம் மாறி நல்லறிவே கூடவேண்டும். உன்னைப் பணிகின்றேன். பொலிந்த தோளினைக் கொண்டவனே! தாமரை மலரில் தோன்றியவனே! மயில்கள் மேவும் மலையில் கொலு வீற்றிருப்பவனே! நிறைந்த புகழினையுடையவனே! மதிப்புமிக்க யானையை உடையவனே! நீயே துணை நிற்க வேண்டும்.

முருகனின் தோற்றம், தோளின் தன்மை, அடியவர்கட்கு அருள்பாலிக்கும் தன்மை முதலிய வற்றை நாம் இங்கு காண்கிறோம்.

64. நிற்க வேயிசை நிறுத்து வார்தவசு
நிட்டை யோகமதை நியமிப்பார்
கற்க வேமனது பற்று வாரினிய
கற்ப ஞானமுமே யுணர்கிற்பார்
வற்க வேதனுமு னுடக்க வேசிறையில்
வைத்த வேல்வரை நிருதச்சூ
ரற்க வேபொருது பொற்பு வேளடியை
சுத்தியே யடுமை பெறுநட்பா.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| தவசு | - | தவம் |
| நிட்டை | - | உறுதி |
| கற்ப ஞானம் | - | தேவலோகம் |
| பொருது | - | போரிட்டு |
| பொற்பு | - | அழகு |

(கருத்து)

தன் வேலின் வலிமையால் அரக்கன் சூரனைப் போரிலே வென்றவன். பின் அவனுக்கு ஞானறிவுத் தந்து தனக்கு நட்பாய்க் கொண்டவன். மேன்மையான தேவர் உலகம் வேண்டும் அடியவர் தங்கள் மனத்தை

வேறிடம் செல்ல விடாது உறுதியாக நின்று தவம் இயற்றுவர். தவம் செய்வோர் மேலான உலகையும் உணர்வர்.

ஒரு செயல் செய்யத் தொடங்கின் முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும் என்பதை இப்பாடல் காட்டுவது நோக்கத்தக்கது. வள்ளுவரின் "மடுத்த வாயெல்லாம் பகடன்னான்" என்ற குறளை ஓர்க.

65. நட்பா தவசுபுரி முத்தா வுறுதியொடு
நற்பா வலர்பரவு மிருபாதா
திட்பா மயிலினுரு வெற்பா பரமுதவு
சித்தாமுனி வரர்க ணிதமாராய்
நுட்பா பிரணவ மிறைக்கே கொலுமன்
துதித்தே சிகானெனு முசிதவேளே
பெட்பா யுனைநித மதித்தே தொழவுறுதி
பெற்றோ னருள்புரிவை தயவாலே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| முத்தா | - | முத்தி பெற்றோன் |
| பரவும் | - | வணங்கும் |
| திட்பம் | - | திண்மை |

பிரணவம் - ஓங்காரம்

உசிதவேளே - அழகானவேளே

பெட்பாய் - அன்பாய்

தயவு - கருணை

நிதம் ஆராய் - நாள்தோறும் ஆராய்கின்ற

(கருத்து)

மெய்ஞ்ஞானம் பெறுவோர் உறுதியுடன் தவம் புரிவர். நல்ல புலவர் உம்மிரு அடிகளையும் வணங்குவர். திண்மையான மயிலிலே ஊர்ந்து செல்கின்ற மலையோனே! அடியார்க்கு முத்தி சித்திக்க அருள்பவனே! முனிவர்கள் ஆராய்வதற்கு நுட்பமானவனே! கடவுளுக்குப் பிரணவம் போதித்தவனே! அழகான வேலைக் கொண்டவனே! நாள்தோறும் அன்புடன் உன்னைத் தொழ உறுதி கொண்டேன். நீ எனக்கு அருள் கூர்ந்து அருள் புரிவாய்.

முனிவர்களுக்கும், அடியார்களுக்கும் ஒருசேர நல்வினை பயப்பவன் என்பது உறுதியாவதைக் காணலாம். முருகனின் செயல்திறனை இங்கு அறியலாம்.

66. தயவா யிந்திரன் மகள்மேல் மஞ்சரி
தரிமா சுந்தர மணவாளா
கயவா யுய்ந்திட உபதே சம்புரி
கதியீ சன்தரு சிறுபாலா
செய்வா யிங்கித நவ்வீ ரன்றுனை
செறிதீ ரமேபெறு குமரேசா
நயவா ணம்பயில் சிகியேறு குஞ்சர
நணுவே னுய்ந்திட வடியேனே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| மஞ்சரி | - | பூமாலை |
| கயவாய் | - | மேன்மை |
| செறிதீரம் | - | நிறைவீரம் |
| நணுவேன் | - | விரும்புவேன் |
| உய்தல் | - | அடைதல். |
| சிகி | - | மயில் |

(கருத்து)

கருணை கொண்டு இந்திரன் மகள் தெய்வானைக்கு மலர்மாலை சூட்டிய அழகிய மணவாளனே! சிவபெருமான் தந்த பாலனே! நான்

மேன்மையடைய ஞான மார்க்கத்தைக் கூறுவாய். எனக்கு நீ துணையென்பதை அடையாளம் காட்டு! நிறைந்த வலிமை கொண்ட குமரா! அடியார் மேன்மைபெற உய்விக்கும் மலையோனே! யானையையும் ஊர்தியாகக் கொண்ட உன்னை விரும்பும் அடியவன் வாழவழி செய்வாய்!

67. அடியனு னக்கு மறுபடி யொருதரம்
அடியிணை வணக்க முயலாத
முடியவ(ல) னெனக்கு வினைவலி துடைத்து
முதுபர வுணர்ச்சி தரவேணும்
கொடியவ லரக்கர் முடியது துணித்த
குறியல படைத்த குமரேசர்
படியவர் துதிக்கு மயில்மலை தழைத்த
பதியெனு மெழிற்சண் முகவீரா.

(சொற்குறிப்பு)

வினைவலி - ஊழ்வினைத் துன்பம்
துடைத்து - நீக்கி
துணித்த - நீக்கிய

(கருத்து)

முதல்வனே! உன் திருவடிகளை மறுபடியும் மறுபடியும் எண்ணாத எனக்கு ஊழ்வினைத் துன்பத்தை நீக்கி முதிர்ந்த ஞான நிலையைத் தருவாய். நினைத்தாலே நடுங்கச் செய்யும் கொடும் அரக்கர் முடியினைச் சாய்த்த வேள்படை கொண்ட குமரா! அடியவர்கள் வணங்கக் கூடிய, மயில்கள் உலாவுகின்ற பதியிலே வாழும் தீரனே! சண்முகனே!

இறைவனை வணங்க வேண்டும் எனும் நினைவு இருந்தும் சூழ்நிலையால் வணங்க முடியாதவனுக்கும் முருகன் அருள் கிட்டும் என்பது குறிப்பு.

68. வீர்மதி யற்று மாணவ மொடுக்கி
  மேலிடு பொறிக்கு நடனாடு
பார்மதி யற்று பாழ்வினை யகற்று
  பாவனை யெனக்கு வரஞான
சார்மதி யியற்றி இதழினை விரித்த
  தாமரை மகட்கு மனையாக
வார்மதி யுற்று கேகய வரைக்குள்
  வாழ்வது படைத்த குருநாதா!

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| ஆணவம் | - | அகங்காரம் |
| பொறி | - | ஐம்புலன் |
| தாமரை மகள் | - | சரசுவதி |
| மதி | - | வளர் அறிவு, சந்திரன், |

(கருத்து)

கேகய மலையில் வாழ்வு கொண்ட குருவே! தேவையான அறியாமை, தன் முனைப்பு, தீய எண்ணங்கள் ஆகிய பாவங்களிலிருந்து விடுபட்டு ஞான ஒளி ஏற்றுவாயாக. சரசுவதி வசிக்கும் இடத்தை மனையாகக் கொண்ட கேகய மலையில், வாழும் அருளே எனக்கு நல்லருள் தந்து உதவுவாயாக. முருகன் வாழ்கின்ற இடம் அறிவின் இருப்பிடமாய் இருப்பதைச் காணலாம்.

69. நாதமார் சுருதி யாகமார் நியமை
நாடுசேர் மயிலின் வரைவந்து
கீதமார் கொலுவில் வாழ்குகா புதிய
நீதனே யுறுதி யொடுநம்பி

போதமா ரறிவு நேயமா மடுமை

பூணுவே னுலகி லுனதன்பு

ஏதமார் வினையி லாமலே தொலைய

ஏகமா முணர்வு தருமிஞ்சி.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| நாதமார் | - | ஓசைகொண்ட |
| சுருதி | - | வேதம் |
| கீதமார் | - | இசை நிரம்பிய |
| போதமார் | - | ஞானம் உள்ள |
| ஏதமார் | - | குற்ற முடையார் |
| தொலைய | - | நீங்க |
| ஏகமா | - | எங்கும் |

(கருத்து)

வேதங்களின் ஒலி நிரம்பிய நியமநாட்டில் மயில்மலை யமர்ந்த முருகா! நேயம், அறிவு முதலியன பூணுமாறு செய்ய உனதன்பை வேண்டும் எனக்குக் குற்றங்களிலிருந்து விடுபட்டு வாழ உறுதி தருவாயாக.

70. மிஞ்சிடு துன்ப முந்திய வின்பமு
மீண்டிய லிந்த வினையாடி
அஞ்சிடு மெந்தன் நெஞ்சக முந்தன்
நடையிலே என்றும் விளையாடி
கொஞ்சிடு பண்பு தந்தரு ளின்று
குஞ்சரி பங்கில் மாமோகம்
அஞ்சிடு தும்பி யஞ்சிலை யின்கண்
வந்துறை கின்ற குகனேமெய்.

(சொற்குறிப்பு)

மீண்டியல் - விடுபடா
தும்பி - வண்டு,
மாமோகம் - அதிக ஆசை

(கருத்து)

வண்டுகளால் ஒலியெழும்பும் மலைமீதமர்ந்து பெருமை தரும் முருகா! நான் செய்த வினைகளால் கொடிய துன்பமும், முந்தி வரும் இன்பமும் மாறி மாறி வருவதால் எனது மனம் அஞ்சுகிறது. உன்னை நாடுகின்ற எனக்கு நல்ல பண்பான உணர்வை உருவாக்கி இன்பமே வாழ்வியலாக்க உதவிடு என

இறைஞ்சுகின்றேன். மனிதமனம் தவறு செய்தல் இயற்கை எனினும், ஒரு கால கட்டத்தில் அது உண்மையை நாடுதல் நோக்கற்பாலது.

71. மெய்ய றாதவி னைவறி வானது
பொய்ய றாத பொறிபுகு தாவகை
செய்ய றாத திருவரு ளேயினி
மெய்ய றாத மயில்மலை வேலரே.

(சொற்குறிப்பு)

மெய்யறாத - உடம்பை நீங்காத
பொய்யறாத - பொய் அகலாத
செய்யறாத - முடிப்பதறியா
புகுதா வகை - சேரும் வகை

(கருத்து)

மயிலை வாகனமாகக் கொண்டு மலைமேல் வாழும் வேலவனே! நல்வினை, தீவினை எனும் வினைகளால் கட்டுண்ட உடலில் அறிவானது பொய்யை அகற்றாது ஐம்புலன்களில் புகுந்துள்ளது. என்ன செய்வது என்று அறியாத எனக்கு இனி

உண்மையான அறிவை உன் திருவருளால் தருவாய்.

வினையின் வலியால் இடருறும் உயிர் அதனை நீங்கும் வகையறியாது தவிக்கிறது. அவன் கருணை ஒன்றே அதிலிருந்து விடுபடச் செய்யும் என்று கூறுவது நோக்கத்தக்கது.

72. வேல வாவென வேடுவி தோளினை
மால வாசிகி மாமலை மேவிய
சீல வாகுரு தேசி கனேயினி
சால வாடி சாரொளி யேநீ

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| வேடுவி | - | வள்ளி |
| சீலவா | - | அழகா |
| குருதேசிகன் | - | ஆசிரியன் |
| சால | - | மிகுதி |

(கருத்து)

மேடான சிகிமலையில் இருக்கின்ற அழகன் முருகனே! பிரமனை சிறையில் அடைத்து தந்தை

சிவனுக்குப் பிரணவப் பொருள் உரைத்த ஆசிரியனே! வேலவனே! உனது கருணையை விரும்பும் எனக்கு ஒளிவடிவான உன்னைத் தருவாயாக!

73. இடந்த ருங்குட மேந்திணைக் கொங்கையர்
மடந்த ருங்சுக வாஞ்சயற் கன்பிடாய்
படந்த ருங்கனை பரந்திருளைத் துண்டரே
யடந்தருஞ் சிகியாஞ் சிலைக் கந்தனே!

(சொற்குறிப்பு)

இணை - இரண்டு
கனை - சூரியன்
மடந்தரும் - பெண்கொடுக்கும்
துண்டா - நீக்குபவர்

(கருத்து)

“அடர்ந்த சிகி மலையில் வீற்றிருக்கும் கந்தனே! பெண்ணின்பமே பெரிய இன்பம் எனக் கருதும் படர்வை நீக்கி உன்னை நினைக்கும் உள்ளத்தைத் தந்து உய்விப்பாயா கந்தா?” என்கிறார் ஆசிரியர்.

இங்கு பெண்ணின் வகையில் கிடைக்கும் இன்பம் உண்மை எனும் நினைவை விடுவிக்கக் கோருவதை நோக்கலாம்.

74. கந்த னேஒரு கானகத் தோகைமுன்
வந்த னேகமெய் மாலையிட் டேயணை
தந்த னேயினி தாமயில் கோடுறை
பந்த னேகன பாவியைக் காரினி.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| கானகம் | - | காடு |
| ஏக | - | போக |
| கோடுறை | - | மலையில் வாழும் |
| பந்தன் | - | உறவன். |

(கருத்து)

காட்டில் வாழும் வேடனின் மகள் குறத்தி முன் அண்ணன் விநாயகனின் உதவியால் யானையை ஏவி அவள் உடம்பிலே மாலையை அணிவித்து, அரவணைத்த கந்தனே! விருப்பமுடன் மயில்கள் உலவும் மலையிலே வாழும் அன்பனே! பாழ்பட்ட உடல் கொண்ட இப்பாவியை இனி காப்பாயாக!

வேடனின் மகள் என்றும் பாராது வள்ளிக்கு வாழ்வு தந்தவன். இந்த ஏழையாகிய பாவியை மன்னித்து வாழ்வு தருவாய் என வேண்டுவது புலனாகும்.

75. காரி சைந்து கனமழை பெய்ய
பாரி சைந்து பயிர்விளை வேபெறும்
சீரி சைந்து செழிநிய மாபுர
மேரி சைந்து மிகுகுக வேள்பதி

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| கார் | - | மேகம் |
| பார் | - | உலகம் |
| சீர் | - | செழுமை |
| மேரு | - | மலை |
| நியமாபுரம் | - | நியமம்; நேமத்தான்பட்டி என அறியப்படும். |

(கருத்து)

மேகம், மகிழ்ந்து மழை பெய்யின் இவ்வுலகம் மிகுந்த விளைச்சலைப் பெறும். செழுமை நிறையின்

வேலன் வாழுகின்ற பொன்மலையானது மேன்மேலும் பொலிவு பெறும்.

எப்படி மழையினால் உலகம் வளம் பெற்றுச் செழுமையாக விளங்குகிறதோ அதுபோல் சீர் மேவும் முருகன் பெருமையால் குன்றானது பொலிவுடன் விளங்குகின்றது என்பதை ஆசிரியர் காட்டியுள்ளமை நோக்கத்தக்கது.

"மாமழை போற்றுதும்" என்ற அருள் நெறியை இளங்கோவடிகள் சுட்டுவதை உன்னுக.

76. பதியில் சிறுபாவை யர்மேவிடும்
வதியில் சூழல்மாய்கை னீடுபர்
கதியில் பலகாலமெ லாமுறவை
நிதியில் செழிநேம விசாகயனே!

(சொற்குறிப்பு)

| | |
|---|---|
| பதி | - வீடு |
| வதி | - சேறு |
| கதி | - அடைக்கலம் |
| நிதி | - செல்வம் |

மேவு - விரும்பும்

நீடுபர் - நெடுங்காலம் இருப்பவர்

நேமவிசாகன் - நியமநாட்டுக் குமரன்.

(கருத்து)

வீடுகளில் இருக்கும் குழந்தைமனம் கொண்ட பெண்களால் விரும்பப்படுபவன். நீண்ட நெடுங் காலம் மாயையாகியச் சேற்றில் உழலுபவர் களுக்குத் துணையாய் நின்று அவர்களுக்கு அடைக்கலம் தந்து உறவாக ஏற்றுக் கொள்பவனும், அவர்களைச் செல்வத்தில் முறையாய்ச் செழுமைப் பெறச் செய்பவனும் முருகையனே!

அழகனான முருகனை அனைவரும் விரும்புவது குறிப்பு. விரும்புபவர்களுக்கு அடைக்கலம் தந்து செல்வச் செழிப்புபடன் வாழச் செய்பவன் விசாகன்.

77. கயமா முக்கண் பதிசேர் தார
செயமா முடிசி லைவசி வேலவா
வயமா மயில்ம லையின் அதிபா
பயமா முடிய ணிபவ ராருயிர்.

(சொற்குறிப்பு)

முக்கண் - சிவன்

செயம் - வெற்றி

வயமா - வலிமை

பயமா - அச்சம்

தார - மாலையணிந்த குமரன்.

(கருத்து)

யானைத் தோல் உடுத்திய முக்கண்களை யுடைய சிவனின் புதல்வன். வெற்றியையுடைய மாலையை அணிந்தவன். வலிமைப் பொருந்தியவன். மயில்கள் வாழும் மலைக்குச் சொந்தக்காரன். அச்சமுடன் உன்னைப் பணியும் அடியார்க்கு நீ ஆருயிராய் இருந்து அருள் செய்பவன்.

78. உயிரா உடலுரு வாய்வினை
பயிரா யிகபர மாய்கையில்
அயிராய் வளரறு மாமுகா
செயிரா யுழல்சிறி யேந்து.

(சொற்குறிப்பு)

இகபரம் - இவ்வுலக, பரலோக வாழ்வு

அயிராய் - வேல் கொண்டு

செயிராய் - துன்பம்

உழல் - சுழலல்

(கருத்து)

அனைத்திற்கும் மூலவன் முருகன் என்பதும், அவன் ஒருவனே செழுமை தர வல்லவன் என்பதும் அறியப்படுகிறது.

79. நிதியே தாயவர் நிலவை யெறிக்கு
மதியே சிகிமா மலையில் முளைத்த
கதியே வமரா கவலை யகற்று
பதியே குமரா பணிவன ருட்செய்!

(சொற்குறிப்பு)

அகற்று - நீக்கு

நிலவையெறிக்கும் - சந்திரனைப் புறங்கொளச் செய்யும்

(கருத்து)

செல்வம் தரவல்லவன். நிலவைப் புறங்கொள்ளும் குளுமையானவன். சிகிமலையில் தோன்றி உய்யும் வழியைக் காட்டியவன். தேவர்கள் கவலையை அகற்றியவன். அத்தகைய முருகா நீ உன்னைப் பணியும் எனக்கு அருள் செய்வாய். நிலவென்றாலே குளுமை உடையது. அத்தகைய குளுமையையே விஞ்சும் வகையில் முருகனருள் உள்ளதைக் காணமுடிகிறது.

80. செய்ய பாதஞ் சேர்சன மேபுரி
வைய பாவ வினையது தீரிட
துய்ய பாடல் துதிமயில் மேருறை
அய்ய பாரயில் அயிலா யிழிந்து!

(சொற்குறிப்பு)

சனமேபுரி - உடனே நீக்கும்
துய்ய - துய்த்தல்
மேருறை - மலையமர்
அயில் - வேல்
அயில் - அழகு

(கருத்து)

செய்த கெடுஞ் செயல்கள் உடனே விலகும்படி செய்வாய். இம்மண்ணுலகத்தில் நான் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கிடச் செய். உன்புகழ்ப் பேசும் பாடல்களை நான் துதிக்கும்படி அருள்செய். மயில் வாகனத்தில் அமர்ந்து கையிலே வேல்கொண்டு வலம் வரும் வேலவனே!

வினையின் வலி துடைக்க, அவன் புகழ்ப் பாடல்கள் படிக்க வேண்டும் என்பது ஒருவகை வழிபாட்டு நெறியாகும் என்பதை அறிக.

81. உகந்தே யுமைக வர்ந்தே
 தயவுடன் சீரியவுச்சி
முகந்தே யுன்உடன் பால்தர
 முயன்றே வளர்நிதிதா
இகந்தா யுயரிடுங் கேகய
 விரும்பார் குகாபத்தர்
உகந்தே யுயிரொடுங் காதிய
 லறிந்தே பெறுமுத்தி.

(சொற்குறிப்பு)

உகந்தே - விரும்பி

(கருத்து)

உமையாள், விரும்பி உன்னை அன்புடன் உனது பெருமைமிகு உச்சியை முகர்ந்து பால் தருவாள். நாளும் அதனை உண்டு நீ வளர்வாய். நீ உறையும் கேகய மலையை விரும்பார் மனத்தில் புகுந்து, புரியும் படி ஒளியினை ஏற்றுவாய். அதன் பயனாய் அவர்கள் மனம் தன் முனைப்பிலிருந்து (அகம்பாவத்தில்) நீங்கி மேலான வீடுபேற்றை அடையும் என்பது குறிப்பு. வளர்நிதியாகிய ஞானத்தை அவன் பக்தர்களுக்குத் தருவதை நாம் காணலாம்.

82. அயிலாயுத கதையாயுத
வமராதிபன் சூர
மயிலாயுயர் வரையாலைய
வரதாவரு கந்தா
பயிலாயுல கினிலேவினை
படுமாழ்வினை பின்பா

லொயிலாயுழ லிடுவேனே

உளமேவு மகந்தை

(சொற்குறிப்பு)

அயிலாயுதம் - வேலாயுதம்

பயிலா - நிலவுதல்

உழலிடு - சிக்குதல்

துளமேவும் - உள்ளத்தில் குடிகொள்ளும்

(கருத்து)

அரக்கன் சூரனை வெல்ல வேல், கதை முதலிய ஆயுதங்களை ஏவியவன். உயர்ந்த மலையில் வாழுகின்ற, மயிலை வாகனமாகக் கொண்ட கந்தா! உலகினில் பயின்று வருகின்ற மாயையாகிய வினைகள் அற்றுப் போகும்படி செய்வாய். அழகனே! துன்பத்தில் மூழ்கித் தவிக்கும் என்னை ஆட்கொண்டு அருள்வாய்.

83. முத்தி நீபா வித்தி நீதவ

முற்று மாதவர் மதிமா

சித்தி நீயுயிர் வற்க நீதெளி

திட்பக் கதித ரவாழ்

சத்தி நீசிகி வெற்பி லேவளர்

தற்ப ராபா குமரா

பத்தி நீயென திச்சை நீயடி

பற்றி னேன்மன துறைவாய்.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| முத்தி | - | பேரின்பம் |
| பாவித்து | - | ஏற்று |
| மாதவர் | - | தவம் இயற்றுபவர் |
| சித்தி | - | நிகழ்வு |
| இச்சை | - | ஆசை. |

(கருத்து)

முத்தியானவன். அனைத்தையும் துறந்த தவத்தோர் தவத்தை ஏற்று அவர்கள் மனத்தில் தெளிந்த ஞானத்தைத் தருபவன். அனைத்தையும் தரவல்ல வலிமையோன். சிகிமலையில் வளரும் பராபரன். உன்னை அடையவேண்டும் என்பதே எனது ஆசை. ஆதலால் உன்னைப் பற்றினேன். எனது மனத்துக் கண் வந்து குடிபுகுவாய்.

இது ஒருவகை உருவகமாகும்.

84. துறைவாய்தொறும் வளையேமணி

சொரிதேனதி மண்டி

நிறைவாய்வயல் விளைநேமையில்

நிமிர்கேகய தண்டி

லுறைவாய்குரு பரனேனென

துடலாடுமி டும்பை

மறைவாயறி வினைநாடிடும்

வகையேபுரி வந்து.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| சொரிதேன் | - | சிந்துகின்ற தேன் |
| மண்டி | - | நிறைந்து |
| நேமையில் | - | நியமம் எனும் நாட்டில் |
| இடும்பை | - | துன்பம் |
| வகை | - | வழி |

(கருத்து)

எல்லா இடங்களிலும் சொட்டு சொட்டாய் தேன் சிந்தி நிறைந்து கிடக்கின்றது. வளமிக்க வயல்கள் நிறைந்து கிடக்கின்ற நியமம் எனும் ஊரில் முறையாக நிமிர்ந்து நிற்கிறது, உன்னுடைய

கேகயமலை. அம்மலையின் கண் வாழும் முருகா! துன்பத்தில் தள்ளாடும் எனது உடம்பை மறைப்பதற்கு, உன்னைக் கண்டுகொள்ளும் வழியை எனக்கு நீ அருள்வாய்.

மண்ணின் வளம் மற்றும் **தேன்** சொரிதல் முதலியன, முருகனின் அன்பர்பால் காட்டும் அருளைக் காட்டுவது நோக்கத்தக்கது.

85. வந்துன் சிகியோடொன் றேவல்
 கொண்ட தன்மிசையே
முந்தன் கொலுவின் பண்பை
 முயன்றும் பணியடியார்
நந்துன் கதிகண் டன்பு
 யர்ந்தும் பரமறிவார்
சிந்துன் படைதங் குங்கை
 திருத்துஞ் சரவணனே!

(சொற்குறிப்பு)

மிசை - உயர்ச்சி
சரவணன் - சரவணப் பொய்கையில்
 தோன்றியவன்

(கருத்து)

கடல் போன்ற பரந்த படைகளைக் கொண்ட சரவணனே! உன்னுடைய சிகிமலைக்கு வந்து உனக்கு அன்பின் மிகுதியால் பணி செய்யும் அடியார், நீ கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு இன்புறுவர். உன்னைக் கண்ட அன்பின் மிகுதியால் உனதருள் கிடைக்கப் பெற்று ஒழுக்கத்திலே உயர்ந்து இறைவனைக் காண்பர் என்பது உட்கருத்து.

86. வணமாமுலை மடவார்நிதி
வளநாடணி கலன்கள்
குணமாமத கரிதேரிவை
குறையாமல் நிரம்பும்
எணமாயுனை நினைபூரணரி
டனாடும் விரும்பி
கணமாமயில் வரைநாயக
கதிர்வேலவ திரண்ட.

(சொற்குறிப்பு)

வணம் - திரண்டு

கரி - ஆண்யானை

கணமாமயில் - மயிற் கூட்டம்.

(கருத்து)

திரண்ட கொங்கைகளைக் கொண்ட பெண்கள் விரும்பி அணிகலன்கள் அணியவும், யானை, தேர் போன்ற இவைநிரம்பி வழியவும், எண்ணங்கள் யாவும் உன்னையே விரும்பி நினைந்து வாழவும், மயில்கள் கூட்டம் கூட்டமாகவுள்ள மலையின் அதிபனாய்க் கதிர்வேலவனாகவே விளங்குகிறாய் நீ! திரண்ட செல்வங்கள் அனைத்தும் அவன் வாழும் மலையில் உள என்பது குறிப்பு.

87. திரண்டே யெதிரிடுஞ் சூர
முடிசிதைந் தேகட லுக்குள்
புரண்டே விழமு னிந்தே
விசைபொருங் கூரயி லத்தர
விரண்டே தொனியிடுஞ் சேவ
லாவியென் கேகய வேபரித்

திரண்டே யிகபரந் தானென
திடஞ்சே ரெனவே வைப்பார்.

(சொற்குறிப்பு)

முனிந்தே - வெறுத்தே
கூரயில் - கூர்மை வேல்
தொனியிடுஞ் சேவல் - ஒலியிடும் சேவல்

(கருத்து)

கடலுக்குள்ளே, திரண்ட வீரம் கொண்ட அரக்கன் சூரனின் முடி அறுந்துவிழச் செய்தவன். கோபத்தால் அவன் உடலைத்தன் கூரிய வேலால் இரண்டாக அறுத்திட்டவன். ஒலியெழுப்பும் சேவலை தன் கொடியிலே கொண்டவன். பெருமை பொருந்திய கேகய மலையில் வாழும் உன்னை மேலிடும் அன்பால் வணங்கி இன்ப உலகம் (மோட்சம்) தரவேண்டும் என உறுதியுடன் வேண்டுவர்.

எதிரி சூரனின் வேண்டுதலை ஏற்று அவனுக்கு பரம் நல்கிய முருகன், அடியாரின் வேண்டு கோளுக்கும் செவி மடுப்பான் என்பது அறியற்பாலது.

88. வைப்பார்முடி யிற்கால்மன

மைக்கா தலின்வசமாய்

பொய்ப்பாரிடை புக்காவகை

பொற்பா ருடல்துவரா

எய்ப்பார்மதித் தேர்தொடியற்

கேகய வரைமேல்

மெய்ப்பார்வேள் நற்சோதி

விரித்தேவளர் செயவேல்.

(சொற்குறிப்பு)

| | |
|---|---|
| பாரிடை | - உலகில் |
| புக்காவகை | - சேராவண்ணம் |
| எய்ப்பு | - தேய்வு |
| சோதிவிரித்தே | - அருள் பரப்பி |
| நற் சோதி | - நல் ஒளி |

(கருத்து)

மனதில் எழுந்த அன்பால் வேண்டும் அடியார்களுக்கு அன்பு காட்டுவாய். உலக வாழ்க்கை பொய்யானது என்பதால் என்மனம் அதன்மேல் செல்லாது நிற்கிறது. பொன்போன்ற

நிறம் கொண்ட மேனியை உடைய உன்னை எனது மனம் நாடுகின்றது. உன் மீது அன்பு கொண்ட எனக்கு நின் கருணையைக் காட்டுவாய். கேகய மலையின்கண் இருக்கின்ற மிகுந்த ஒளிமயமானவனே! வாழ்வில் நலிவுற்ற எனக்கு அருள்தருவாய். என்பது குறிப்பு

89. செய்யவேல் வரைசேவ லாசிகி
மாமலை யுடையார்
கய்யவேல் முகவர் சேர்தரா
கதிரென வீன்வனமான
புய்யவே யணைதரு மோகனார்
புகழ்வேல் பணியடியேன்
உய்யவே இகபர சாதகமுன்
நேசமோ டருள்வார்.

(சொற்குறிப்பு)

கய்யவேல் - கையில் உள்ள வேல்
முகவர் - பேரறிவாளர்
புய்ய - நிறைவாக
மோகனர் - பெரியோன்

(கருத்து)

கையிலே வேலையும், சேவல் கொடியையும் உடையவன். சிகி எனும் மலையில் வாழுகின்றவன். பேரறிவாளர்களுக்குக் கையிலுள்ள வேலே வழிகாட்டி நிற்கும். ஒலிமிக்க உன்கையிலுள்ள வேலை புகழ்ந்து பணிந்த எனக்கு அருள்தந்து மேலான வீடு பேற்றைத் தருவாயாக. மனிதமனம் நிலையற்ற உலக வாழ்வை விரும்பாது மேலான வீடு பேற்றை அடையவேண்டும் என்பது குறிப்பு.

90. அருள்வா ருதிகுண மாமலை
யறிவாலய முனிவோர்
பொருள்வா ணர்கள்தா ழசுரர்
புகநால் மறைமடவார்
மருள்வா லிபமயில் மாமலை
வருவேள் குருபரனார்
தெருள்வா யமைய ரிடமே
செறிவார் வினைபரிவார்.

(சொற்குறிப்பு)

| | |
|---|---|
| முனிவோர் | - முனிவர்கள் |
| வாணர்கள் | - வாழபவர்கள் |
| மருள் | - மயக்கம் |
| தெருள் | - தெளிவு |
| செறிவார் | - நெருக்கம் |

(கருத்து)

அருள் வழங்கும் வள்ளல் வாழும் மாமலையாம் தோகை மலையை வெறுத்து அணுகார், ஒருபோதும் அறிவு தெளிவு பெறார். பொருள் படைத்தவர், நால்மறைகளையும் கற்றறிந்தோர், பெண்களினால் மயக்க மடைந்த வாலிபர்கள் அறிவு தெளிவு பெற்று அழகு வேலனை வணங்கினால் முன்வினை களைந்து நன்மையே அடைவர். என்பது உட்கருத்து.

மனித மனம் சிற்றின்பத்தின்பால் ஈர்க்கப் படுவது இயற்கை. இருப்பினும் அதிலிருந்து விடுபடவும், மேலான வீடுபேறு கிடைக்கவும் அவனுடைய அருள் தேவை எனக் காட்டுவதை இங்கு நாம் நோக்கலாம். சிற்றின்பமா, பேரின்பமா

என்பது நம்முன் நிற்கும் வினாவாகும். இதற்கு இப்பாடல் விடை சொல்லுகிறது.

91. பரிவான அண்டர் மனதூ டிருந்து
பவமோ சனசெய் சரணா
விரிவா னமஞ்சு விளையா டுகின்ற
மிகுதோ கையம்பொன் வரையாய்
தெரிவா னதந்து மறைதேட வந்த
திகளா றுகஞ்ச முகனே
பிரிவா னசிந்தை யுனையே யறிந்து
பிணையாய் வணங்கு நெறிதா.

(சொற்குறிப்பு)

மோசனம் - விடுகை

மஞ்சு - மேகம்

பிணையாய் - அகலாமல்.

(கருத்து)

இரக்கமே குணமாகக் கொண்ட நீ, உனது அடியார் மனத்தில் நின்று அவர்களுடைய பாவங்களையெல்லாம் போக்கி அருள் தருவாய்.

பெரும் மேகக் கூட்டங்கள் சூழ்ந்ததும், மயில் கூட்டங்கள் விளையாடுகின்ற பொன் மலையின் தலைவனே! வாழ்விற்கு நன்மை பயக்கக்கூடிய அறக்கருத்துக்களைத் தந்த ஆறுமுகனே! பல நினைவிலிருக்கும் எனது மனத்தை ஒருமுகப் படுத்தி உன்னை வணங்குகின்ற நெறியினைத் தருவாய்.

முருகனுக்கு இங்கு சரணா என்கிற ஒரு பெயர் வழங்கப் படுதலைக் காணலாம். மற்றவர்க்கு அடைக்கலம் தந்து அவர்களுக்கு வாழ்வு தந்தமையால் இப்பெயர் வருதல் நோக்கத்தக்கது. சரணாகதி வேண்டுபவர்க்குச் சரணாகதி நல்குபவனாக இருப்பதால் 'சரணா' என்றார் போலும் இவ்வாசிரியர்.

92. நெறியா யிடும்பை யறவே தவங்கள்
நிசமாய் முயன்று னடியே
குறியாய் வணங்கு யினியேழை நெஞ்சு
குடியா கவந்து புகுவாய்

வெறியாய் நடஞ்செய் நடனா செகண்டி
விரைமே ரிலங்கு குமரர்
உறியாய் முகுந்தன் மருகா சுமங்கை
உமைதே டவந்த மகவே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| இடும்பை | - | துன்பம் |
| நிசமாய் | - | உண்மையுள்ள |
| உறி | - | தூக்கு |
| முகுந்தன் | - | விஷ்ணு |
| மருகா | - | மருமகன். |

(கருத்து)

வேகமுடன் நடனமாடி வெற்றி கண்ட சிவனின் புதல்வனே! மேடான தோகை மலையிலே வாழுகின்ற குமரா! திருமாலின் மருமகனே! மங்கையர்க்கெல்லாம் அரசியாகிய உமையவளின் புதல்வனே! துன்பங்களையெல்லாம் பொறுத்து முறையாகத் தவம் செய்கிறேன். உனது திருவடியை அடைய வேண்டும் எனும் நோக்குடன் அப்படிச் செய்கிறேன். அதனால் இந்த ஏழையின் மனத்திலே

வந்து குடி புகுவாய். முருகன் தன்னை ஆட்கொள்ள வேண்டி, எத்தகைய துன்பத்தையும் அடியவர் சுமப்பர் என்பது பெறப்படுகிறது.

93. மகவா னளித்த மடவாள் கழுத்தில்
மணமா லையிட்ட கணவா
செகவா ணிரிச்சை யிசையே தரித்த
சிகியா னவெற்பி லரசே
அகவாய் மைவைத்து னிருதாள் மதிக்கும்
அடியா ருகத்து மடியார்
தகவா ரிவற்ற வயிலே விடுத்த
தலைவா கதித்த முருகோனே!

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| மகவான் | - | இந்திரன் |
| செகவான் | - | உலகமக்கள் |
| உகத்து | - | உலகத்தின் |
| தகவார் | - | தேவர் |
| கதித்த | - | எழுச்சி |

(கருத்து)

இந்திரனின் மகள் தெய்வயானையின் கழுத்தில் மலர் மாலைச் சூட்டியவன். உலக மக்கள் பால் கருணை கொண்டு சிகிமலையில் வாழுகின்ற அரசன். உண்மை அன்புடன் உன் இரு திருவடிமேல் பற்றுக் கொண்ட அடியார்களின் நெஞ்சங்களிலே குடியிருப்பவன். தேவர்கள் உவக்கும்படி அரக்கர் மீது வேல் ஏவிய தலைவன் எழுச்சிமிக்க முருகனாம்.

94. முருகான கஞ்ச மலராள் விளங்க
முடிமீது துங்க மலைமேல்
ஒருகான மங்கை தருநீழல் மங்கை
யுடன்வாழ் வுகொண்ட குமரா
வருகா னவண்டு விழியார் சுகங்கொள்
மனமாய் னகதுன்று தமியேன்
அருகான துன்ப மறவே தவங்கள்
அருள்வா யன்ப னெனவே.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| துங்கமலை | - | உயர்வு மலை |
| துன்று | - | நெருக்கம் |
| தமியேன் | - | தனித்தவன் |
| அருகான துன்பம் | - | பக்கமான இடர் |

(கருத்து)

அழகான காட்டுமங்கை வள்ளியுடன் உயர்வான மலையின் மீது வாழுகின்ற முருகனே! வண்டுபோன்ற விழிகளையுடைய பெண்களிடம் கொண்ட இன்பத்தின் பயனாய் மாயையாகிய உலகிலே சிக்கித் தவிக்கிறேன். இப்படிச் சிக்கித் தவிக்கும் எனக்கு எனது துன்பங்கள் அறவே நீங்கும்படி நல்ல தவங்கள் இயற்றும் ஆற்றலைத் தருவாய்.

95. எனவேட மிங்கே உயிர்மேல் முனிந்துமே
எமனார் துடர்ந்து வருமுன்
கனவேட வென்றி மயிலேறி வந்து
கதையா லடர்ந்த ருள்வாய்

சினவேட னங்க முடியீசர் தந்த
சிறுவால துங்க வரையாய்
புனவேட மங்கை கணவா மிகுந்த
புகன்மே விரண்டு சரணா

(சொற்குறிப்பு)

முனிந்து - வெறுத்து
கதை - தண்டாயுதம்
அடர்ந்து - செறிந்து

(கருத்து)

எமன் என்னைத் தொடர்ந்து வந்து கவரும் முன்னர், வெற்றி மயிலேறி வேகமாக வந்து உனது தண்டாயுதத்தால் எமனைத் தாக்கி எனக்கு அருள் தருவாய், வேடனாக வந்த சிவபெருமானின் இளைய குமரனே! குன்றுகளுக்கெல்லாம் அதிபதியே! தினைப் புனத்தில் காவல் கொண்ட வள்ளியின் மணவாளா! சரவணா! மிகுந்த ஆர்வத்தால் உலகமே உன்னை நாடுகின்றது.

பிறப்பின் பின் இறப்பு என்பது நியதி. இங்கு அவ்விறப்பைத் தரக்கூடிய எமன் நெருங்குவதற்கு

முன் ஆட்கொள் என்று கூறுவது, அடியார்க்கு ஆண்டவனை அடைய வேண்டும் எனும் வேட்கை இருப்பதை நாம் காணலாம்.

96. சரணாடு சிந்தை செகமாய்கை கொண்டு
    தளராம லன்பு றுதியாய்
முரணாடு மின்ப மயஞான மின்று
    முறையா யுவந்த ருளுவாய்
திரணாடு வஞ்சம் பேதாடுஞ் செயலே
    திறமே புரிந்த குமரா
வரணாடு துங்கை மலைமே லிலங்கு
    மழகா குறிஞ்சி நகரோய்.

(சொற்குறிப்பு)

சரணாடு சிந்தை - அடைக்கலமான நெஞ்சம்
முரண் - வேறுபாடு
திரண் - திரளுதல்

(கருத்து)

குறிஞ்சி மலையில் வாழ்பவனே! நிறைந்த மயக்கத்தில் ஆழ்ந்த எனது சிந்தை முழுதும் வேறுபாடு அற்று, தளர்வு கொள்ளாது, அன்புடன்

உன்னிடம் அடைக்கலம் கொள்கிறது. நீ முறையாக வந்து எனக்கு ஞானத்தை அருள்வாய்.

'அடைக்கலம்' - என்பது ஒரு உயரிய கோட்பாடு. அது இங்கு நினைவூட்டப்படுகிறது.

97. நகராளி துங்க மலையாளி முந்து
  நதியாளி துன்று மகமார
தகராளி வஞ்சி மயிலாளி யன்பர்
  தனையாளி செம்பொன் ஒளிகூர
புகராளி வென்றி யயிலாளி மிஞ்சு
  புகழாழி மந்திர மிறைபால
பகராழி கந்த னடியே நினைந்து
  பணிவார்க ளென்று மிறவார்.

(சொற்குறிப்பு)

அயிலாளி - வேலினையுடையவன்

(கருத்து)

மலைமேல் வாழ்பவனே! நதியிலே தோன்றியவனே! யானையைக் கொண்டு வள்ளியை மணந்தவனே! மயிலை வாகனமாகக் கொண்டவனே!

அன்பர்களை வழிநடத்தி அவர்களுக்கு ஒளியைத் தரும், புகழை உடையவனே! வெற்றி பொருந்திய வேலினை உடையவனே! பெரும் புகழ் கொண்டவனே! படைப்புக் கடவுள் எனப் பேசப்படும் பிரமனைச் சிறையில் அடைத்துத் தந்தை சிவனுக்கு மந்திரம் சொன்னவனே! உன்னை நினைந்து உனதடி பணிவார் என்றும் இறப்பினை அடைய மாட்டார்.

98. இறைவா திருப்பர் தவமே விளைப்பர்
இசையே பொறுப்பர் பரமே
மறவா திருப்பர் வினையே யொளிப்பர்
மடவார்க ளிச்சை நலமேவு
பெறவா திருப்பர் மயிலாயு ருக்கொள்
பெரிதான வெற்பி னிடமேவு
துறவா திருப்பர் குமரேசர் பத்தி
துலையாத சித்தர் வடியார்.

(சொற்குறிப்பு)

பரம் - இறை
இச்சை - ஆசை
உருக்கொள் - வடிவம் கொள்கிற

வெற்பு - மலை

துறவு - நீக்கு

(கருத்து)

தவம் செய்யும் பெரியோர் என்றும் இறவாது புகழால் நிலைத்திருப்பர். என்றுமுள்ள பரம்பொருளை நினைத்திருப்பர். தீவினைப் பயக்கக் கூடிய செயல்களை நீக்குவர். பெண்கள் பால் காம இச்சை கொள்ளாதிருப்பர். மலையிலே மயிலின் மேல் ஏறிவரும் உன்னை என்றும் நீங்காதிருப்பர். உன்னடியார் என்றும் தங்கள் மனத்தில் உன்னையே நினைத்திருப்பர்.

இப்பாடலில் தவமேன்மை, பரம்பொருளின் நிலை முதலியவற்றை ஆசிரியர் அழகுறக் காட்டுவதைக் காணலாம்.

99. அடியார் விரும்பு முருகா தவஞ்செய்
அறிவாளர் துன்ப விடிவே
பிடியார் மருங்குல் மடவார் களன்பு
பெறவே முயங்கு குமரா

படியார் மனங்க ளெனமோது மஞ்சு
படிதோ கையபொன் வரையாய்
குடியாய் குறிஞ்சி நகரோய் கந்தை
குறியேனை யஞ்சல் புரிவாய்.

(சொற்குறிப்பு)

விடிவே - நீக்குபவனே
மருங்குல் - பக்கம்
முயங்கும் - சேரும்
குறியோனை - நினைவோனை.

(கருத்து)

அடியார்களால் வணங்கப்படும் முருகனே! நல்ல தவம் செய்து அறிவு பெற்ற சான்றோர்களின் துன்பத்திற்கெல்லாம் விடிவாக உள்ளவனே! வள்ளி, தெய்வானை எனும் இருமங்கையர்களை பக்கத்தில் கொண்டு, அவர்கள் பால் அன்பு கொண்டு வாழ்பவனே! மேகங்கள் சூழுகின்ற, மயில்கள் வாழுகின்ற பொன்மலைக்குச் சொந்தக்காரனே! குறிஞ்சி நகர மக்களுக்கெல்லாம் அரசே! அப்படிப்பட்ட உன்னை வணங்குகிறேன், அருள் செய்வாய்!.

அடியார், பிடியார், படியார், குடியாய் போன்ற சொற்கள் அடிகளின் முதலில் நின்று ஓசையைக் கூட்டுவதைக் காணலாம்.

100. புரிநூ லிலங்கு மணிமார் புமன்பு
புரியாறு கஞ்ச முகமாய்
விரிநூல் விளம்புங் கனிவாயும் வென்றி
மிகுவே லுயர்ந்த கரமும்
வரிநூ லம்ப மலர்நீ பலங்கல்
வினைவா குமெந்தை மயிலு
மரிநூ புரங்க ளொலிதாளு நம்பு
மடவார் வாழ்துன்னு புடவி.

(சொற்குறிப்பு)

| | | |
|---|---|---|
| புரிநூல் | - | மார்பில் அணியும்நூல் |
| விரிநூல் | - | ஞானநூல் |
| கனிவாய் | - | கொவ்வை வாய் |

(கருத்து)

மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மார்பில் நூல் அணிந்தவன். அன்பு பொழிகின்ற ஆறுமுகங்களைக் கொண்டவன். பிரணவப் பொருளைக் கூறிய சிவந்த வாயினையுடையவன். உயர்ந்த கைகளிலே வெற்றியை உடைய வேலினைக் கொண்டவன் எங்கள் இனிய முருகன்.

நூல் முற்றும்.